விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது


Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை (02.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தேசிய அரசாங்கத்தை அமைக்க

# ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை



## சர்வதேசத்தை சமாளிக்க இதுவே வழியாம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக வலுத்து வரும் சர்வதேச அழுத்தத்திலிருந்தும் போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுபடுவதற்காக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் அதிரடி நடவடிக்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ள தாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் போர்க்குற்ற விசாரணை அமெரிக்காவை உஷாராக்குகிறது இந்தியா!

(புதுடில்லி)

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப் படல்வேண்டும் என்பதில் ஐரோப்பிய நாடுகளின் நிலைப்பாட்டிற்கு இந்தியா மறைமுகமாகத் தனது ஆதரவை வழங்கிவருவதாக இந்திய அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட் டுள்ளனர்.

வன்னியில் இழைக்கப்பட்டதாகக் கூறப்ப டும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என அமெரிக்கா மற் றும் பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடு கள் வலியுறுத்திய நிலையில் அதற்கு இந்தியா மறைமுகமாக எதிர்ப்புக் காட்டியிருந்தது.

இந்நிலையில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இலங்கையில் நடந்த போர்க்குற்றம் குறித்த விடயத்தில் மென்மை யான அழுத்தத்தையே இலங்கை அரசுக்குக் கொடுத்துவந்தன.

எனினும் தற்போது இலங்கை விடயத்தில் எத்தகைய தலையீட்டையும் கொண்டிருப்ப தில்லை என்ற இந்திய மத்திய அரசின் முடிவை யடுத்து,

இலங்கையின் (19ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்டவர்கள் வீடு செல்ல அனுமதியில்லை

(கொழும்பு)

புனர்வாழ்வுப் பயிற்சிகளின் பின்னர் ஜனாதிபதியால் கடந்த வெள்ளியன்று பெற் றோரிடம் கையளிக்கப்பட்ட முன்னாள் போராளி களைத் தம்முடன் வீடுகளுக்கு அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று அவர் களது பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தினால் புனர்வாழ் வளிக்கப்பட்டுச் சமூகத்தில் இணைக்கப்படு வதற்காக விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்ந்திருந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் நடந்த போர்க்குற்றம் சர்வதேச விசாரணை கட்டாயம்

### பிரித்தானிய நிழல் அமைச்சர் வலியுறுத்து

(லண்டன்)

பிரித்தானியாவின் நிழல் வெளியுறவுத் துறை அமைச்சராகவுள்ள நாடாளுமன்ற உறுப் பினர் டக்ளஸ் அலெக்சாண்டர் இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று கூறியுள்ளார். 2009ஆம் ஆண்டு இறுதிக்காலப்பகுதியில் இலங்கையில் இடம் பெற்ற போரின் போது இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேசரீதியாக ஆணைக்குழு ஒன்று அமைக் கப் படல் வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

கடந்த 28ஆம் திகதியன்று தொழிற்கட் சிக்கான தமிழர்களின் மாநாடு நடத்தப்பட்டது. இதன்போது (19ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் அருணோதயா கல்லூரிக்கு மூன்று தங்கம்

(கொழும்பு)

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடை யிலான தடகளப் போட்டிகளில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீர, வீராங்கனை கள் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற் றுள்ளனர்.

அத்துடன் நேற்றுவரை நடைபெற்ற தடகளப் போட்டிகளில் வடக்கு மாகாணப் பாடசாலைகளின் வீர, வீராங்கனைகள் 3 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் மற்றும் ஒரு வர்ண விருது என்பவற்றைப் பெற்றுள்ள னர்.

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடை யிலான 2011ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டிகள் பியகம மகிந்த ராஜபக்ஷ விளை யாட்டரங்கில் (19ஆம் பக்கம் பார்க்க)

பயனீர் அக்ரோ ரெக்ஸ்
PIONEER AGRO TEX
சல்வார் ரகங்கள், சாரி ரகங்கள், வேஷ்டி ரகங்கள்,
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து
மொத்த வியாபாரம் செய்பவர்கள்.
சைனா வீதிக்கு அருகில்
பிரைம் பிளாசா
261/19, பிரதான வீதி,
கொழும்பு-11
M:- 077 1077215
Ph:- 011 2394906
pmsandco@yahoo.com
Near China Street,
PRIME PLAZA
261/19, Main St.,
Colombo-11

## விடுவிக்கப்படாத முன்னாள் போராளிகளின் நிலைமை என்ன? உறவினர்கள் கேள்வி

(கொழும்பு)

போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரண டைந்த 1800 முன்னாள் போராளிகளை அரசாங்கம் நேற்று விடுதலை செய்துள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரபூர்வ வசிப்பிடமான அலரி மாளிகையில் பல்வேறு நாடுகளினதும் இராஜதந்திரிகள் முன்னிலையில், 1800 முன்னாள் போராளிகளையும் விடுதலை செய்யும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது. புனர் வாழ்வு பெற்று விடுதலையாகும் முன்னாள் போராளி களின் இறுதி அணி இதுவே என்றும் அரசாங்க வட்டாரங் கள் தகவல் வெளியிட்டுள்ளன.

எனினும் படையினரின் புனர்வாழ்வு முகாம்களில் மேலும் நூற்றுக்கணக்கான முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக (02ஆம் பக்கம் பார்க்க)

முதன் முறையாக யாழ் மண்ணில்!
City & Guilds
சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Engineering Qualifications
மேலதிக விபரங்களுக்கு 0771 067 394
SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
The Leader in Technical Education
Colombo | Kandy | Jaffna

**கணக்காளர் தேவை**

இல. 127/14, யுமிலி பஜார்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணத்தில் இயங்கும்
குமார் ரெக்ஸ் கடைக்கு
கணக்காளர் தேவை. ஆண்,
பெண் இருபாலாரும் நேரில் வரவும். (சி-4606)

# தொண்டைமானாறு கடற்கரையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு பெரிய கடற்கரைப் பகுதியிலிருந்து குடும்பஸ்தரின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் காலை 7 மணியளவில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இச்சடலத்தைக் கண்டுள்ளனர்.

கொக்குவில் பொற்பதி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நாகேந்திரம் தமிழ்நேசன் (வயது 32) என்ற குடும்பஸ்தரின் சடலமென இனங் காணப்பட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித் துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-6,12,52)

**வீடு /காணி விற்பனைக்குண்டு** (6443)

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் இருந்து 50 யார் தொலைவில் 2 1/2 பரப்புடைய கடையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. [கடை 15 X 25 அடி]
T.P.:0712303304, 0777767663
110 Lks. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

**வீடு வாடகைக்கு**

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியில் (பெற்றோல் செற் அருகாமை) வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு நிறுவனங்களுக்கு மட்டும் வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு:- 077 9149221
075 6715762
(6440)

**திருமண சேவை**

20 வருடங்களுக்கு மேலாக நேர்த்தியான முறையில் திருமண சேவையை நடாத்திவரும் எமது ஸ்தாபனத்தாருடன் தொடர்பு கொண்டு உங்கள் மணமகன், மணமகள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.
Multitop Marriage Propposals
1-1/1, Frankfurt Place,
Colombo - 4.
T.P.:- 0777422692, 0113159274 (6448)

**தேவை**

சாவகச்சேரி பிரதேசத்தில் நிறுவனம் ஒன்றிக்கு 1500 - 3000 சதுரஅடி வரையான இடம் வாடகைக்கு தேவை. கண்டி வீதியை அண்மித்ததாக இருப்பது விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 0776108420 (சி-4609)

**விற்பனைக்கு**

அராலி வடக்கில்
7 பரப்பு காணியும்
வீடும்
விற்பனைக்கு
உண்டு.
தொடர்பு:-
075 6768081 (சி-4605)

**வீடு விற்பனைக்கு**

சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியில் பெரிய கல் வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
T.P.:- 0754985939
0773502821 (6443)

## விடுவிக்க...

அவர்களின் உறவினர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். புனர்வாழ்வளிக்கப்படும் முன்னாள் போராளிகள் அனைவரும் இந்த ஆண்டு இறுதிக்குள் விடுவிக்கப்படுவர் என அரசாங்கம் ஏற்கெனவே கூறியிருந்தது.

இந்நிலையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் இறுதி அணியே நேற்று விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளமையானது, இன்னமும் தடுப்பிலுள்ள முன்னாள் போராளிகளின் உறவினர்கள் மத்தியில் கவலையையும் சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த 12 ஆயிரம் போராளிகளில் சுமார் 800 வரையானோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசு கூறி வந்தது.

கடந்த வாரம் நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் 2 ஆயிரம் முன்னாள் போராளிகள் மீது நீதிமன்றங்களில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவுள்ளதாகக் கூறியிருந்தார்.

இதனால் புனர்வாழ்வளிக்கப்படும் ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் மீதும் அரசாங்கம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதா என்ற சந்தேகம் உறவினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. (ந-5)

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**
ஆங்கிலத்தில் ஆசியாவில் மட்டுமல்ல
சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
City & Guilds -UK English Course @ ESOFT

**AutoCad 2D 3D**

**TALLY**

Diploma in Information Technology
Diploma in Software Engineering
Diploma in Web Engineering
Diploma in Business Management

Esoft Computer Studies
17/1 Brown Road
Jaffna

Hotline 077 309 9 308

| | | | |
|---|---|---|---|
| Jaffna | 021-2224142 | Nelliyadi | 021-2264940 |
| Kilinochchi | 021-2285444 | Kodikamam | 0773099308 |
| Chavakachcheri | 0773099308 | Uduppiddy | 021-3201303 |

**ENGLISH**
The Easy Way at
YAALH ENGLISH ACADEMY
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்களுக்கு : 077 3212711 (6169)

**ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்**
**SHRI DHAN LAXMI YANTRA**
FREE GIFT கையிருப்பு உள்ளவரை
இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!

Swiss gold
Product inside
1. Two Shri Dhan Laxmi Kavach (24ct.gold plated foil pendant)
2. Siddha Maa Laxmi Idol
3. Meru Shri Yantra (Gold Plated)
4. Maa Laxmi Charan Paduka (Gold Plated)
5. Shri Laxmi Yantra (Gold Plated)

SRI LANKA flex அருள்
Tel: 0777 614 186

**ACS**
1st Mile Post Junction, Point Pedro.
**ENGLISH COURSES**

SPOKEN ENGLISH (03 Months)
- Polishing Grammar & Pronunciation
- Self Introduction,
- Questioning and Answering
- Speaking about their past experiences
- Dialogues and telephone conversations
- Story telling

BASIC ENGLISH (03 Months)
- Grammar
- Conversation/ Dialogues
- Reading Comprehension
- Writing and formal and informal purposes
- Listening Comprehension

PROFESSIONAL ENGLISH (06 Months)
- Advanced Grammar
- Formal and informal Correspondence
- Paraphrasing / Summary Writing
- Project / Proposal / Report Writing & Presentation
- Advanced Reading / Listening
- Mini Project Work

More knowledge with less fees with experienced lecturers
Certificate awarded by
BRITISH ENGLISH LANGUAGE IMPROVEMENT CENTRE
தொடர்புகளுக்கு ACS Technology System (Pvt) Ltd.
1ம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை. T.P.No.: 0750435257 (6472)

**COMPUTER CLASSES**
CERTIFICATE IN INTERNET TECHNOLOGY
*Software & Video Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messanger, Video Call, Net Call* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
Ms Office, DTP, Hardware, Programming, Accounting Packages, Graphic Designing, Web Designing, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன (பூரண தமிழ் மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும் ஆர்வம் உள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்)
NORTH LEAD EDUCATIONAL CENTER
[illegible] Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 2[illegible]445[illegible], [illegible]72533390, Fax: 222 4460

**ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின்**
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2012
தரம் 4 வகுப்பு (தற்போது தரம் 3) ஆகியன ஆரம்பமாகின்றன.
யாழ்ப்பாணத்தில் — அன்பொளி கல்வியகம் — யாழ்.இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
சாவகச்சேரியில் — அன்பொளி கல்விநிலையம் — தபாற்கந்தோர் வீதி,சாவகச்சேரி
அனுமதிகளை 08.10.2011 இற்கு முன்னதாக உடன் பெற்றுக் கொள்ளவும்.
-இயக்குநர்கள் (C-4613)

**REPAIRING**
Contact : 021-222 4459, 0774192275
சகலவிதமான கணனிகளும், இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
NORTH LEAD
Computer Sales and Service Center
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

# அழகானதோர் வாழ்க்கை உங்களுக்கும் உள்ளது அது எமக்குப் புரிகிறது....



மற்றைய வாகனங்களுக்குக் கிடைக்கும் புல் ஒப்ஷன் சேவையினைப் போன்றே, மோட்டார் சைக்கிள் செலுத்தும் உங்கள் வாழ்க்கைக்கும் வேறெந்த காப்புறுதிகளிலும் கிடைக்காத அரிய வாய்ப்புகள் ஏராளம். உங்களுடனும் உங்கள் குடும்பத்தினருடனும் வழித்துணையாக வர ஜனசக்தியிலுள்ள நாம் தயாராகவுள்ளோம்.

JANASHAKTHI FULL OPTION

வாழ்க்கைப் பயணத்தின் வழித்துணை

- மோட்டார் சைக்கிள் செலுத்துகையில் அகால மரணம் ஏற்பட்டால் ரூ.100,000/-
- ரூ. 50,000/- வரை வைத்தியசாலைக் கட்டணம்
- தலை கவச பாதுகாப்புக் காப்புறுதி - இலவசம்
- திடீர் விபத்து நேரிட்டால் ரூ. 100,000/- (காப்புறுதியாளருக்கு)

- 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை
- விபத்து நடந்த இடத்திலேயே அங்கீகாரம்
- நாடளாவிய கராஜ் வலையமைப்பு
- மேலும் பல சலுகைகள் ஏராளம்

அழையுங்கள் 0112 303 300

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ஜனசக்தி இன்சூரன்ஸ் பீ.எல்.சீ. (பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம்)

JANASHAKTHI INSURANCE

# தற்போது விற்பனையில்...

யாழ்.மக்களின் நன்மதிப்பை பெற்ற

## KUBOTA - K-550 Landmaster



நீங்கள் நாடவேண்டிய இடம்,

**எஸ்.பி.என். மோட்டோர்ஸ்**
**145, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

SAMSUNG

அறிமுகமாகின்றது

## இரட்டை தொடர்புகளுக்கு ஸேம்ஸங் ஹீரோ 1182 டுவல் சிம் ஃபோன்.



ஸேம்ஸங் ஹீரோ 1182 இனை கொள்வனவு செய்து இலவசமாக டயலொக் ப்ரீ பெய்ட் இணைப்பினை பெற்றுக்கொள்ளுங்கள்

**3 மாதங்கள்** வரை ஒவ்வொரு மாதமும் டயலொக்கிலிருந்து டயலொக்கிற்கு **1000 SMS இலவசம்**




இலவசமான அசல் ஸேம்ஸங் ஹான்ட்ஸ் ஃப்ரீ கிட்

- வர்ணத்திரை
- FM ரேடியோ
- MP3 ரிங் டோன்ஸ்
- லவுட்ஸ்பீகர்
- 11 மணி நேரம் பேசும் வசதி
- மெடலிக் வடிவம்

Hero 1182
Dual SIM

ரூபா.3,990/-

Next is what?
SAMSUNG mobile

கையடக்க தொலைபேசிக்கு ஒரு வருட உத்தரவாதம் / பட்டரி சாஜர் மற்றும் இயர்ஃபோனுக்கு 6 மாத உத்தரவாதம்

2011 அக்டோபர் 10 வரை செல்லுபடியாகும் இச்சலுகையை நாடுமுழுவதுமுள்ள ஸேம்ஸங் மொபைல் வியாபாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதனை மீட்டுக்கொள்வதற்கு எந்தவொரு டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கும் விஜயம் செய்யுங்கள்.

அவசர நிதித் தேவைகளுக்கு உடனடி சிநேகபூர்வ சேவை

## செலான் தங்க நகை அடகுச் சேவை

அதிக பணம் குறைந்த வட்டி கூடுதலான பரிசுகள்





மாதாந்த வட்டி 1.125% மட்டுமே

**24k 41,000/-**
**22k 36,500/-**

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 011 200 88 88

GRACE

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

Brand Finance Rating: "A" Fitch Rating: "BBB"

www.eseylan.com

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சுழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிர மத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடை பெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் பண்டிதர் பொன். சுகந்தன் மகாபாரதம் என்னும் தலைப்பில் தொடர் சொற் பொழிவாற்றுவார். (12-35)

## டெங்குக் காய்ச்சல் சிறுவர்களை அதிகம் பாதிப்புக்குள்ளாக்குகிறது

(கொழும்பு)

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்படுகின்றமையே கடந்த காலங்களில் சிறுவர்கள் எதிர்நோக்கிய பாரதூரமான பிரச்சினைகளில் ஒன்றாக விளங்கியது என சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகள் கடந்த வருடம் சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடியுள்ளனர் என்று வைத்தியசாலையின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான வைத்தியர் ரத்னசிறி ஏ.ஹேவகே கூறினார்.

அத்துடன் தற்போது காத்துக் கொள்ளக் கூடிய வீதி விபத்துக்களுக்கு இலக்காகின்றமை கடந்த காலப்பகுதியில் சிறுவர்கள் எதிர்நோக்கிய மற்றுமொரு பிரச்சினையாகும் என அவர் தெரிவித்தார். (4-2)

## தேசிய சுகாதார வாரத்தினை முன்னிட்டு சுகநல திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவினருடன் இணைந்து தேசிய சுகாதார வாரத்தினை முன்னிட்டு பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் பல்வேறு சுகநல மேம்பாட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதில் முன்னெடுக்கப்படவிருக்கும் செயற்பாடுகளில் பிரதேச சுகநல வார ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலர் தலைமையிலும் அன்றைய தினம் யாழ்.பிரதேச செயலகத்தில் பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் தலைமையிலும் நடைபெறும்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சகல நிறுவனங்கள், வைத்தியசாலைகள், தனியார் வைத்தியசாலைகள், பாடசாலைகள், முன்பள்ளிகள், பொது இடங்கள், தனியார் கல்விக்கூடங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்களில் சிரமதானம் மூலமாக சுத்திகரிப்பு செய்தல் என்பன இடம்பெறும். (4-2-12)

## மஹோற்சவ கால கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஹரி இளைஞர் மன்றத்தின் 10 ஆவது அகவையை முன்னிட்டு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான மஹோற்சவ காலத்தில் நடாத்தப்படும் கலை நிகழ்வுகள் கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் பிற்பகல் 7.30 மணிவரை ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான முன்றலில் செல்வன் செ.கமல்ராஜ் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்றைய நாள் நிகழ்வாக சத்தியதாசன் குழுவினர் வழங்கும் சத்தியவான் சாவித்திரி எனும் தொனிப் பொருளில் வில்லுப்பாட்டு இசைக்கவுள்ளனர்.

அத்தோடு நாளை திங்கட்கிழமை சாயித்தியன் குழுவினர் கர்நாடக சங்கீதத்தை வழங்கவுள்ளனர். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ரி. கவாஸ்கரின் கர்நாடக இசைக் கச்சேரி இடம்பெறும்.

அத்தோடு எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை பட்டிமன்றம், பரத நாட்டியம் ஆகியன இடம்பெறும். (2-12)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/புனித மரியாள் வித்தியாலயத்தில் அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திக் குழுத் தெரிவும் இடம்பெறவுள்ளதாக வித்தியாலய அதிபர் எஸ்.கியூ. பி.மொறாய்ஸ் தெரிவித்துள்ளார். (4-12)

## இராசி பலன்

02.10.2011
(புரட்டாதி 15, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பஞ்சமி காலை 6.09 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.25 மணிவரை
அனுஷம் முற்பகல் 10.41 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
சஷ்டி விரதம்.

**மேடம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் கூடும், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம்.

**இடபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசமும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, பிரிந்தவர் இணையும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், ஆரோக்கியம் சீராகும், கடனை தீர்க்கும் வாய்ப்புண்டு, பகைவர்கள் விலகுவர், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**கடகம்** தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு கிடைக்கும், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், கைமாற்றாக கொடுத்த பணம் திரும்பி வரலாம், கந்தன் வழிபாடு முன்னேற்றம் தரும்.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும், பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொழில் நன்மையுண்டு.

**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சுப காரியப் பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும், போசன சுகமுண்டு.

**தனுசு** திடீர் பயணங்களால் சற்று அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் கிடைக்கும், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உறவினர்களுக்காக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**கும்பம்** அருமையான நாள், அன்பு நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்ட முன்வருவர், புதிய திட்டங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலம் ஆரோக்கியமாக இருக்கும்.

**மீனம்** மனக்குழப்பங்கள் குறைந்து மகிழ்ச்சி கூடும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகப் படுத்தும்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### வடக்கில் தலை வைக்கலாமா?

"டாக்டர்! இவர் எனக்கு மிகவும் வேண்டப்பட்டவர்! இவரை உடனடியாக நீங்கள் கவனிக்க வேண்டும்!"

"என்ன விடயம்?"

" நடு இரவில் எழுந்து நடக்க ஆரம்பிக்கின்றார்!"

"அப்படியா? சரி. உட்காருங்கள்... கவனிப்போம்!"

" ஏன் டாக்டர்? வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள்.... அதைப் பற்றி உங்களின் அபிப் பிராயம் என்ன...?"

" அவர்கள் சொல்வதில் அர்த்தம் இருப்பது போலத்தான் தெரிகின்றது!"

" எப்படி சொல்கிறீர்கள்?"

" நமது ஊரில் (Madras Institute of Managenetobiology) இதைப் பற்றி ஒரு சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள்!"

" எப்படி?"

" ஒரு விதமான காந்தப் படுக்கையில் ஒரு நபரை படுக்க வைத்து இந்த சோதனையைச் செய்து பார்த்திருக்கிறார்கள்! வடக்கே தலை வைத்துப் படுக்கும் போது மூளையிலே சில செயற்பாடுகளின் (Brain electrical activity) வேகமும்.... விரல் இரத்த ஓட்ட வேகமும் குறைகிறது! கிழக்கே தலைவைத்து படுத்தால் எல்லாம் சரியாக மாறிவிடும்!"

"அப்படித்தான் தோன்றுகிறது!"

"சரி! அது இருக்கட்டும்.... இவருக்கு உடனடியாக சிகிச்சையை ஆரம்பிக்க... எனக்கு மிகவும் கவலையாக இருக்கின்றது!"

"இதற்குப் போய் ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீங்கள்?"

"இவர் தூக்கத்தில் நடப்பதோடு இருந்தால் மட்டும் பரவாயில்லை! நடந்து எதிர் வீட்டுத் தோட்டத்துக்குப் போகிறார். அங்கே இருக்கின்ற கத்தரிக்காயெல்லாம் பறித்துக் கொண்டு வந்து விடுகிறார் டாக்டர்! இதுவரைக்கும் அந்த அப்பாவி எதிர் வீட்டுக்காரனுக்கு 215 ரூபா நட்டம்!"

" அது எப்படி அவ்வளவு சரியாக சொல்கிறீங்கள்?"

" நான்தானே அந்த அப்பாவி!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 70 |
| தக்காளி | 50 | 70 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 30 | 60 | 35 |
| கரட் | 50 | 90 | 40 |
| பூசணி | 40 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 25 |
| வாழைக்காய் | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 40 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 30 | 70 | 40 |
| கரணைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 70 | 100 | 70 |
| லீக்ஸ் | 50 | 80 | 50 |
| பீற்றூட் | 15 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 50 | 40 |
| முருங்கைக்காய் | 70 | 90 | 130 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரி தம்புள்ள | 35 | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 230 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் மீதான விசாரணைகள் ஆரம்பமாகின

(கொழும்பு)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து சுகாதார அமைச்சு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

சங்கத்தின் உறுப்பினர்கள் சுகாதார அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் உபுல் குணசேகர குறிப்பிட்டார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ள அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

தமது சங்கத்தின் தலைவர் மீது உயர் கல்வி அமைச்சரால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அமைச்சு மட்டத்திலான விசாரணையை நடத்தி அது தொடர்பிலான அறிக்கையை வெளியிடுமாறு சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக உபுல் ஜயசூரிய தெரிவித்தார்.

நாட்டின் சுகாதார சேவையில் உள்ள வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மீதும் உயர்கல்வி அமைச்சர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு தமது அமைப்பு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்மூலம் வைத்தியர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டி விட முயற்சிப்பதாகவும் அரசாங்க அதிகாரிகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தமது தொழிற்சங்கத்தின் மத்திய செயற்குழு தீர்மானித்திருப்பதாக அவர் கூறினார். (4-2)

# கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார இரண்டாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வாரம் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கைதடி சாந்தி நிலையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இல்ல அத்தியட்சகர் நா.இராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிற்துறை திணைக்கள பணிப்பாளர் க.சிவகரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலக கணக்காளர் கில்பெட்குணம், சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரட்ணம், கைதடி தெற்கு கிராம உத்தியோகத்தர் குருசாமி ஐயர் சிவகுமார சர்மா, கைதடி சுகாதார பிரிவோதகர் ரி.கண்ணதாசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இதில் தொழிற்துறை திணைக்கள அலுவலர்கள் முதியோர்களுடனான கலந்துரையாடல் மற்றும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியத்தின் நடனம், இசையால் இணைவோம் இன்னிசை நிகழ்வு என்பனவும் இடம் பெறும். (4-12)



# 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ மாணவியருக்கு பாராட்டு விழா - 2011




யாழ்மாவட்ட படையினர் தலைமையகம் நடாத்தும் 2011இல் 5ம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவ, மாணவியரை வாழ்த்திப் பாராட்டும் நிகழ்வு

இடம்: சிவில் அலுவல்கள் பொதுமக்கள் தொடர்பு அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 2.10.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

## யாழ் மாவட்ட படைத்தளபதி மஅவர்களது வாழ்த்துச் செய்தி



2011ம் ஆண்டின் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில், யாழ் மாவட்டப் பரீட்சார்த்திகளில் பெரும் தொகையினர் பேறு பெற்றுள்ளார்கள் என்பதை அறிந்து நான் இணையிலா மகிழ்ச்சி கொண்டுள்ளேன். யாழ் மாவட்டத்தில் பணிபுரியும் படையினர் அனைவரும் இங்குள்ள மாணவ மாணவியரின் கல்வி வளர்ச்சிக்காக மிகுந்த ஊக்கத்துடன் சேவைபுரிகின்றனர். படையினர் கட்டளைத் தளபதி என்ற வகையில் அவர்கள் சார்பாகவும், தனிப்பட்ட முறையிலும் நான் எங்கள் மாணவச் செல்வங்களுக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இந்த மாணவச் செல்வங்கள், தங்கள் தங்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது பெரு முயற்சிக்கும் தாங்கள் கற்கும் பாடசாலைக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்கள்.

மாணவர் செல்வங்களாகிய உங்கள் அனைவர்க்கும் பாராட்டுதல்களையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவிக்கும் அதே வேளையில் இது உங்கள் முதல் வெற்றி. உங்கள் நீண்ட கல்விப்பாதையில் நீங்கள் மேலும் மேலும் உழைக்க வேண்டி இருக்கும். அந்த நேரங்களில் எல்லாம் நானும் எனது படையினரும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என உறுதி அளிக்கிறேன்.

வளமுடன் வாழ்க. என் உளமார்ந்த நல்லாசிகள்

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க
யாழ் மாவட்ட படையினர் கட்டளைத்தளபதி

## வடமாகாண கல்விக்கலாச்சார விளையாட்டு அமைச்சின் உபசெயலாளரின் வாழ்த்து



யாழ்மாவட்ட கட்டளைத்தளபதி அவர்கள் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வுக்கு எனது வாழ்த்துக்களை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிகழ்வு மேன்மைதங்கிய வடமாகாண ஆளுநரால் அவர் யாழ்படையினர் கட்டளைத் தளபதியாக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்று படையினர் எப்பொழுதும் கல்வித்துறைக்கு உதவிய வண்ணமே உள்ளனர். அவர்கள் எங்கள் கல்வித் தூண்கள் என்று சொல்லலாம்.

வடமாகாண கல்வி சமுதாயத்தினர் சார்பாக யாழ் படையினர் கட்டளைத்தளபதி அவர்களுக்கும் ஏனைய படையினருக்கும் சாதனை புரிந்த எங்கள் மாணவச் செல்வங்களை கௌரவிப்பதையிட்டு எங்கள் உளங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

V. T. செல்வரட்ணம்
உபசெயலர்
கல்வி கலாச்சார விளையாட்டு அமைச்சு
வடமாகாணம்.

## யாழ்ப்பாணத்தில் முதல் பத்து இடங்கள்



R. நிதுசிகா
ஆசிரியர் திருமதி மரினா றொபின்
யாழ் சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



S. துவாரகன்
ஆசிரியர் திருமதி மரினா றொபின்
யாழ் சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



L. டிலோஜன்
ஆசிரியர் திருமதி பத்மநாதன்
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை



K. கேஜுகா
ஆசிரியர் திருமதி சுபரத்னா
யாழ் ஆரலி சரஸ்வதி வித்தியாலயம்



கனகேஸ்வரன் கவிநா
ஆசிரியர் செல்வராணி சின்னத்துரை
யாழ் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்



ராஜ்குமார் விவேகா
ஆசிரியர் திருமதி K. சிவகுமார்
யாழ் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்



P. பவதாரகன்
ஆசிரியர் திருமதி குவேனி
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை



R. மாதங்கி
ஆசிரியர் திரு அன்பழகன்
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை



K. கஜனி
ஆசிரியர் திருமதி மரினா றொபின்
யாழ் சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



பரமேஸ்வரன் சாஜிகா
ஆசிரியர் திருமதி K.A.குளசிங்கம்
யாழ் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

| பெயர் | பாடசாலை | புள்ளிகள் |
|---|---|---|
| 11. S. தவலக்ஷன் | யாழ் இந்து ஆரம்ப பாடசாலை | 187 |
| 12. N. கஜேந்திரன் | யாழ் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் | 187 |
| 13. M. நிகன் | வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி | 187 |
| 14. K. கஜலக்ஷி | யாழ் மானிப்பாய் விவேகானந்தா வி. | 187 |
| 15. K. தனுசன் | உடுவில் மகளிர் கல்லூரி | 187 |
| 16. S. கைரன்சாயா | கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பா. | 187 |
| 17. A. அபிராம் | யாழ் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் | 186 |
| 18. T. வைஷ்ணவி | கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | 186 |
| 19. J. முகேஷன் | மாதகல் சென். தோமஸ் க. ம. பா | 186 |
| 20. P. அக்ஷயா | புலோலி சிவப்பிரகாசா | 186 |
| 21. R. மோகனகிஷன் | யாழ் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் | 185 |
| 22. R. சுசுந்தன் | குப்பிளான் சிவப்பிரகாசம் ம. வி. | 185 |
| 23. K. சரண் | யாழ் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் | 184 |
| 24. P. நிசோதன் | ஏழாலை மேற்கு சிவ சண்முகநா வி. | 184 |
| 25. J. சாம்பவி | கரவெட்டி மாணிக்கவாசகர் வி. | 184 |
| 26. A. தமிழ்ப்பிரியா | யாழ் இந்து ஆரம்ப பாடசாலை | 183 |
| 27. B. சாஜனா | ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை | 183 |
| 28. J. A. சஜுனன் | வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி | 183 |
| [illegible] M. கயல்விழி | கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி க. வி. | 183 |
| [illegible] | அருணோதயா கல்லூரி | 183 |
| 31. U. வந்தனா | மானிப்பாய் மகளிர் பாடசாலை | 183 |
| 32. R. சர்வராயினி | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 183 |
| 33. I. கலைதிலா | யாழ் இந்து ஆரம்ப பாடசாலை | 182 |
| 34. J. ஜெயராம் | யாழ் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் | 182 |
| 35. J. மாதவன் | கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | 182 |
| 36. S. கீர்த்திகா | அத்தியார் இந்துக் கல்லூரி | 182 |
| 37. J. Y. இவாஞ்சலின் | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 182 |
| 38. S. தேனுசன் | ஏழாலை மேற்கு சிவசண்முகநாதா வி. | 182 |
| 39. S. தனராஜ் | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 182 |
| 40. R. அக்ஷயா | கரவெட்டி மாணிக்கவாசகர் வி. | 182 |
| 41. P. பவியா | மட்டுவில் சந்திரமௌலீசா வி. | 182 |
| 42. R. லகீஸ் | உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் | 182 |
| 43. S. அநுபமா | யாழ் இந்து ஆரம்ப பாடசாலை | 181 |
| 44. S. சங்கவிதா | யாழ் இந்து ஆரம்ப பாடசாலை | 181 |
| 45. S. மிதுசி | யாழ் இந்து ஆரம்ப பாடசாலை | 181 |
| 46. J. அகிலன் | உரும்பிராய் சைவத் தமிழ் வி. | 181 |
| 47. A. மயூரி | வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி | 181 |
| 48. P. நிஷாந்தி | மாதகல் விக்னேஸ்வரா வி. | 181 |
| 49. S. விதுர்சன் | காரை ஊரி அ. மி. த. க. பாடசாலை | 181 |
| 50. S. திரோஜன் | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 181 |
| 51. M. துஷாந் | கரவெட்டி மாணிக்கவாசகர் வி. | 181 |
| 52. A. பிரியாதர்ஷா | சென். தோமஸ் றோ. க. த. பாடசாலை | 181 |
| 53. J. தாருசன் | புலோலி சிவப்பிரகாச வித்தியாலயம் | 181 |
| 54. R. துஷாரகன் | பருத்தித்துறை சித்தி விநாயகர் வி. | 181 |




# பொதுக்கூட்டம்

(மருதங்கேணி)

தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபை பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றலில் தலைவர் க. வேணுகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

, மேற்படி கூட்டத்திற்கு அங்கத்த வர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (12-35)

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

ஒவ்வேர்(செலோன்) நிறுவனத்தினரால், தாயகம் திரும்பியோர், இடம்பெயர்ந்தோர் அடிப்படை ஆவணங்கள் பெற உதவுதல் போன்றவை தொடர்பிலான சேவை ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

இதில் வன்னியிலிருந்து திரும்பியோர் இந்தியா மற்றும் வேறு நாடுகளில் இடம் பெயர்ந்து வசித்து தற்போது தாயகம் திரும்பியோர் மேற்படி நடமாடும் சேவையில் பங்குபற்றி பயனடையும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் மேலதிக தகவல்களுக்கு தங்கள் பகுதி கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளும் படியும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார். (2-12)

# வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சப்றா கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் தினமும் வாணி விழாவும் இன்று மதியம் 12 மணிக்கு கல்வி நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆசியுரையினை சித்தங்கேணி மகா கணபதிப் பிள்ளையார் கோவிலடி தேவஸ்தான குரு சிவஸ்ரீ.கமலநாதசர்மா வழங்கவுள்ளார்.

அத்துடன் அன்றையதினம் ஆசிரியர் கௌரவிப்பும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பும் நடைபெறும். (2-12)

# நவராத்திரீ பாமாலை



செந்தாமரையில் வீற்றிருக்கும்
இலக்குமியம்மா

செல்வங்களை பொழிவாய் வரலட்
சுமியம்மா
திருமாலின் திருவடியில் திருமக ளம்மா
பாற்கடலில் பள்ளி கொண்ட
நாரயணிய ம்மா ஜனகனின்
மகளாம் சீதைய ம்மா
சங்கு சக்கர நாயகியம்மா

சுவாமி ராஜேந்திரன்
*செல்வச்சந்நிதீ கோவிலடி,*
*தொண்டைமானாறு*

# அரச ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டம் மேலும் இரண்டு இடங்களில்- வவுனியா அரச அதிபர்

வவுனியா மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டமானது மேலும் இரண்டு இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் காணி அற்ற அரச ஊழியர்களுக்கான காணியுடனான வீட்டுத் திட்டம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த வாரம் வவுனியா வேப்பங்குளத்தில் ஒரு தொகுதி அரச ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டம் அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அமைச்சர் விமல் வீரவன்சவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் மேலும் ஈரப்பெரியகுளம் மற்றும் நெடுங்கேணியிலும் வீடமைப்புத் திட்டங்களை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய வீட்டுத் திட்டத்தின் ஊடாக 175 வீடுகள் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவை மரையடித்தகுளம், ராமயன்குளம் மற்றும் சிங்கள பிரதேச செயலகப் பகுதியிலும் வவுனியா வடக்கு புளியங்குளம் பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தது டன் பயனாளிகள் தெரிவும் இடம்பெற்று நிறைவடைந் துள்ளதாகவும் தெரிவித்தார். (4-2)

# க.பொ.த.(சா.த.) மாணவர்களுக்கு கல்விக் கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

ஊவா வெல்லஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சமூகம், யாழ். கல்வி வலய ஆதரவுடன் நடத்தும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கில் இன்று காலை 9 மணிக்கு கணித பாடக் கருத்தரங்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிறீடிஸ் ஹோட்டல் அன்ட் றெஸ்றோறன் மற்றும் கிளாசிக் ஜுவல்லறி உரிமையாளருமான தங்கராஜா வாசுதேவன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி. பாலசுப்பிரமணியம், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ஆர். இராஜசேகரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு இன்று கணித பாடக் கருத்தரங்கும் நாளை திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கணித பாடமும் நாளை மறுதினம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான பாடக் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது. (4-12)

# ராஜ் ராஜரட்ணம் புலிகளுக்கு நிதியுதவிகளை வழங்கியுள்ளார்

(கொழும்பு)

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட பிரபல அமெரிக்க வர்த்தகர் ராஜ் ராஜரட்ணம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவிகளை வழங்கியுள்ளதாக வானிட்டி பெயார் என்னும் பிரபல சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

ராஜ் ராஜரட்ணம் அமெரிக்க நிதிச் சந்தை மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நிதிச் சந்தை சார் தகவல்களை இரகசியமாக பெற்றுக் கொண்டு கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ராஜ் ராஜரட்ணம் பெருமளவு பணத்தை வழங்கியதாக குறிப்பிடுத்தியுள்ளார்.

புலிகளுக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டுமென ராஜ் ராஜரட்ணம் கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது. புலிகளுடன் ராஜ் ராஜரட்ணம் பேணிய தொடர்புகளை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் அறிந்திருந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித அடிப்படையும் கிடையாது என ராஜ் ராஜரட்ணத்தின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். நிதிச் சந்தை மோசடி குறித்து நீதிமன்றில் தீர்ப்பு அளிக்கப்படவுள்ள நிலையில் இவ்வாறு அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிதிச் சந்தை மோசடிகளில் ஈடுபட்டமைக்காக அமெரிக்காவில் வழங்கப்படக் கூடிய மிக தண்டனை ராஜ் ராஜரட்ணத்தற்கு வழ லாம் என எதிர்பார் படுகிறது. (4-2)

# சிறுப்பிட்டி வடக்குப் பகுதியில் 18 பவுண் தங்க நகை கொள்ளை

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றினுள் பல இலட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.


இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, ஆசிரியர்களான வீட்டு உரிமையாளர்கள் பாடசாலை சென்று விட்டு வீடு திரும்பி வந்து பார்த்த பொழுது வீட்டின் கூரை பிரிக்கப்பட்டு களவாடப்பட்ட சம்பவம் தெரியவந்தது.

வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த 18 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகளும் திருட்டுப் போனது தெரிய வந்தது.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-2-12-70)

# சிறுவர் பருவத்தை அர்த்தமாக்குங்கள்



## ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

நேற்றைய தினம் சர்வதேச சிறுவர் மற்றும் முதியவர் தினமாகும். இதனை முன்னிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள செய்தியில், சிறுவர் பருவத்தை அர்த்தமாக்கிக் கொள்ளுமாறு அனைத்து சிறுவர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், சிறுவர் உலகத்தின் இனிமையான தருணங்களை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அனைவரினதும் கடமை என குறிப்பிட்டுள்ளார்.

உலக சிறுவர் தினம் தொடர்பான தேசிய நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

யாருடைய சிறுவர்கள் இவர்கள். உங்களது எமது சிறுவர்கள் - தாய் நாட்டை போன்று பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் சிறுவர் தினம் இலங்கையில் கொண்டாடப்படுகின்றது. (4-2)

# ஏசியன் நிறுவன அதிகாரிகள் மத்தியஸ்தர் சபையுடன் சந்திப்பு

(நல்லூர்)

கொழும்பிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஏசியன் நிறுவன நிலைய அதிகாரிகள் யாழ். மாவட்டத்திலுள்ள சில மத்தியஸ்தர் சபைகளுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைய கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபைக்கு சென்ற அதிகாரிகள் மத்தியஸ்த சபை சிறந்த நிர்வாகத் தன்மையுடன் செயற்பட்டு வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இச் சபையில் கூடுதலான பிணக்குகள் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளதையும் பிணக்குகள் கூடுதலாக வருவதையும் பிணக்காளர்கள் கூடுதலாக நிற்பதையும் அவதானித்த அதிகாரிகள் இச்சபையின் தவிசாளர், உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர். (12-134)


## STUDY IN UKRAINE EAST EUROPE & OBTAIN WORLD CLASS DEGREE MBBS/MD & AEROSPACE ENGINEERING

**English Medium: www.lsmu.com**

**LUGANSK STATE UNIVERSITY,TOP RANK UNIVERSITY IN UKRAINE.**

கிழக்கு ஐரோப்பாவில் முதல் தர மருத்துவ பல்கலைக்கழகம்.

Sri Lanka Medical council/ W.H.O/ Indian Medical council/ General council of Medicine (U.K)

தகுதி:- O/L, A/L Science 3 பாடங்கள்.

**2011 SEP/OCT- INTAKE Special offer for North/ East students.**

***First 15 Students, Admissions fees will be not taken**

**THIS OFFER IN ONLY UP TO- 25.09.2011-15.10.2011** மட்டுமே!

**AEROSPACE ENGINEERING**

KHARKIV AVIATION INSTITUTE.

சர்வதேச மட்டத்தில் முதல் தரம் வாய்ந்த AEROSPACE ENGI NEERING சை உருவாக்கிய பெருமைக்குரிய ஸ்தாபனம்

தகுதி:- O/L, A/L Maths/Science 3 பாடங்கள்.

வீசா நுழைவுச்சீட்டு விபரங்களுக்கு உத்தரவாதம் தரக்கூடிய பிரதிநிதி. 20 வருட கல்வி உலகில் மாணவர்களின் நலன் கருதி 15 மாணவர்களுக்கு இலவச உட்பிரவேச சலுகை.

**Contact- Sri Lanka-**

G-Naguleswaran -Director Royal International School. {Reg no L 139806} T/p 0242225661/ 0773568631

Ukraine- Dr. Dhillon/ Dr. Eswaran 00380931582345

(6454)

# த.தே.கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது

## அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு



தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இருக்கின்றது. எக்காரணம் கொண்டும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை ஏமாற்றும் எண்ணம் எமக்கில்லை. இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தீர்வு விடயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் நடாத்தும் பேச்சுவார்த்தை தொடர்பாக அவர் வழங்கிய செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியுள்ளதாவது,

ஜெனீவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப்பேரவையின் கூட்டத்தொடரின் போது எமக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சில தரப்பினர் முயற்சித்தனர். ஆனால் அந்த முயற்சிகள் வெற்றியடையவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு நியமனத்தில் தாமதம் இருப்பதாக தெரியவில்லை. பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கான பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக சபாநாயகர் நடவடிக்கைகளை மேற்கொள்வார். அந்த வகையில் பாராளுமன்ற தெரிவுக்குழு விரைவில் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழ்த்தேசிய தேசிய கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஒரு கட்டத்தில் ஸ்தம்பிதமடையும் நிலைக்கு சென்றது என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இருக்கின்றது. எக்காரணம் கொண்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஏமாற்றும் எண்ணம் எமக்கு இல்லை.

தீர்வு விடயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவது அவசியமாகும். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது வடக்கில் அதிகளவு பிரதிநிதிகளை பெற்றுக் கொண்டுள்ள கட்சியாகும். அதனை ஒருபோதும் புறக்கணிக்க முடியாது.

எனவே முக்கிய விடயங்கள் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டியது அவசியமாகும். அதனையே நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம்.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. இணக்கப்பாடுகள் எட்டப்படும் என்று நம்பிக்கை உள்ளது.

அதாவது தமிழ்பேசும் மக்களை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமாகும். எனவே, தீர்வுத்திட்டம் என்பது வரும். அது தொடர்பில் நாங்கள் நம்பிக்கை வைக்கலாம் என்றார். (4-2)

## பொதுப்பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 27 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி, 10.45 மணி, மதியம் 12.15 மணி, 2.15 மணி, 4 மணி ஆகிய அமர்வுகளில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதென யாழ்ப் பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4-12)

# ஆசனப் பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இலக்கத்தகடு கொண்ட கார் மற்றும் இரட்டை வலுவுடைய வாகனங்களின் சாரதிகள் மற்றும் முன் ஆசனத்தில் அமர்கின்றவர்கள் நேற்றிலிருந்து ஆசனப் பட்டியை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டின் மூன்றாம் இலக்க மோட்டார் வாகன திருத்தச்சட்டத்தின் விதிகளுக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுதல் பதிவு செய்யப்படும் அனைத்து பேருந்துகள் மற்றும் லொறிகளுக்கும் இந்தச் சட்டம் அமுலாவதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகிறது.

எனினும் மருத்துவ ஆலோசனைக்கு அமைய ஆசனப்பட்டி அணிவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்கள் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் விசேட தேவையில் ஈடுபடுத்தப்படும் வாகனங்கள், சிறிய ரக உழவு இயந்திரங்கள் என்பவற்றுக்காக இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தை மீறுகின்றவர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் அல்லது இடைநிறுத்தி வைக்கப்பட்ட தண்டனைகளை வழங்க முடியும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கிறது. (4-2)

# சர்வதேச நீதிமன்றில் எத்தனை வழக்குகள் தொடுத்தாலும் எதிர்கொள்வதற்கு தயார்

## சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் கூளுரை

(கொழும்பு)

சர்வதேச நீதிமன்றங்களில் இலங்கைக்கு எதிராக எத்தனை வழக்குகளை தொடுத்தாலும் அவை அத்தனையையும் எதிர்கொள்ள இலங்கை ஒருபோதும் அஞ்சப் போவதில்லை என்று முன்னாள் சட்ட மா அதிபரும் அமைச்சரவை ஆலோசகருமான மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு தேவையான அனைத்துச் சட்ட உதவிகளையும் பாதுகாப்பையும் அரசாங்கம் வழங்கும். இலங்கைக்கு எதிராக வழக்கு தொடரும் நாடுகளுக்கு நாம் நல்ல பாடங்களை புகட்டுவோம். விள்ரவில் அந் நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல் சம்பவங்களை அதே சர்வதேச நீதிமன்றில் முன்வைத்து வழக்கு தொடருவோம் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐ.நா.வில் இலங்கைக்கான நிரந்தர பிரதிவதிவிட பிரதிநிதியாக உள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு தேவையான சட்டப் பாதுகாப்பு உள்ளது. எனவே அச்சப்படத் தேவையில்லை.

பொது வழக்கு என்றாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச இராஜதந்திர கொள்கைகளுக்கு அமைவாக சவேந்திர சில்வா பாதுகாக்கப்படுவார்.

எவ்வாறாயினும் இலங்கையின் நற்பெயரை கெடுக்கும் வகையில் மேற்குலக நாடுகள் மற்றும் அந்நாடுகளில் வாழும் தமிழ் இடம்பெயர் சமூகத்தினர் வழக்குகளை தொடர்கின்றனர். இவை நாளை அவர்களுக்கு ஏற்படும் எனக் கூறினார். (4-2)

# ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு எதிர்க்கட்சியை வலுப்படுத்த வேண்டும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரே கட்சியை பலப்படுத்துவது ஆபத்தாக அமையக்கூடும் என ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது. நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட எதிர்க்கட்சிகளையும் வலுப்படுத்த வேண்டியது அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சம் முக்கியமான சில உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையேனும் எதிர்க்கட்சிகளிடம் வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பல கட்சிகளின் பிரதிநிதித்துவத்தினால் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி பாராளுமன்றம் மற்றும் அநேகமான உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நபர்களை கவனத்திற்கொள்ளாது கட்சியைக் கருத்திற் கொண்டு வாக்களிக் வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (4-2)







வட மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் முதியோர் வாரத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் கைதடியில் அமைந்துள்ள சாந்திநிலையத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதியோர்களுடன் விருந்தினர் அழைத்து வரப்படுவதையும், முதியோர் ஒருவருக்கு பரிசுப்பொதி ஆளுநரால் வழங்கப்படுவதையும் இந் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என். குமார்)

# மனித உரிமைக்குழுவில் உத்தியோகபூர்வ பற்றற்ற முறையில் பேச்சுக்குத் தயார்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு



தாருஸ்மான் அறிக்கை தொடர்பில் உத்தியோகபற்றற்ற பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மனிதஉரிமை குழுவில் உத்தியோக பற்றற்ற முறையில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் இதற்காக அரசாங்கம் தயாராகி வருவதாகவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறான விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் என்பது குறித்து ஆராயப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லி ணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும் தாருஸ்மான் அறிக்கையையும் ஒப்பீடு செய்து கருத்துக்களை வெளியிட மனித உரிமைக் குழு உத்தேசித்துள்ளது.

இதேவேளை மனித உரிமைக்குழுவில் அமர்வுகள் நடைபெறும் காலத்தில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நீர் வழங்கல் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியிலான அழுத்தங்களை முறியடித்து இலங்கையை பாதுகாப்பதற்கு அனைத்து வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

போலிப் பிரசாரங்களினால் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்ட தரப்பினருக்கும் நாட்டின் உண்மைநிலைமை பற்றி விளக்கமளிப்பது கடினமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# இலங்கைக்கு எதிராக மீளவும் போர்க்குற்றம் சுமத்த முயற்சி

## திவயின தகவல்

இலங்கைக்கு எதிராக மீளவும் போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு சில தரப்பினர் முயற்சி செய்து வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறு அரச சார்பற்ற நிறுவனங்களும் அதனுடன் தொடர்புடைய 17 வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் புத்திஜீவிகள் என தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் 50 க்கும் மேற்பட்டவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் போர்க்குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக வலியுறுத்தக் கூடிய தகவல்களை குறித்த தரப்பினர் திரட்டி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பொலிஸார் நடத்திய விசாரணைகளின் பின்னர் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கொழும்பு, ரொரன்டோ, மெல்போர்ன், பேர்ளின், நோர்வே, ஜெனீவா மற்றும் லண்டன் போன்ற நகரங்களை மையமாகக் கொண்டு இந்த சக்திகள் இயங்கி வருவதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (4-2)

# போலி அமெரிக்க டொலர் தாள்களை வைத்திருந்த மாலைதீவு பிரஜைகள் கைது

போலி அமெரிக்க டொலர் நாணயத்தாள்களை வைத்திருந்த மாலைதீவுப் பிரஜைகள் இருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச அளவில் போலி நாணயங்களைப் பயன்படுத்தும் கும்பல் ஒன்றில் உறுப்பினர்களான அவர்கள் இருவரும் கைது செய்யப்படும் போது பெருந்தொகையான அமெரிக்க டொலர்கள் மற்றும் இலங்கை நாணயத்தாள்களை வைத்திருந்திருந்தனர்.

போலி அமெரிக்க டொலர் நாணயங்களைப் பயன்படுத்தி பொருட்களைக் கொள்வனவு செய்திருந்த அவர்கள் அதன் பின் அவ்வாறான நாணயத்தாள்களைப் பயன்படுத்தி கசினோசாலையொன்றில் சூதாட முயன்ற போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாலைதீவு மற்றும் இலங்கைப் பொலிசாரும் கூட்டாக இணைந்தே அவர்களைக் கைது செய்திருந்தனர். (4-2)

# மறுவாழ்வுத் திட்டத்திற்கு ஜப்பான் 9.3 பில். ரூபா கடன் வழங்கியுள்ளது

(கொழும்பு)

இயற்கை பேரழிவுகள் மற்றும் மறுவாழ்வுத் திட்டம் எனும் கருப்பொருளின் கீழ் ஜப்பான் அரசாங்கம் 9.3 பில்லியன் ரூபாவை இலங்கைக்கு இலகு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மத்திய, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேசங்களின் மீள் கட்டுமான மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்நிதி பயன்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஜப்பான் அரசாங்கம் பல்வேறு மனிதாபிமான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாண்டில் கிழக்கு ஜப்பானில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தினால் பாரிய அழிவுகளை சந்திக்க நேர்ந்தது. எனினும் ஜப்பான் அரசாங்கம் தனது மனிதாபிமான அடிப்படையிலான சர்வதேச நாடுகளுக்கான கடன் வழங்கல் செயற்பாடு தொடரும். அந்த வகையிலேயே ஜப்பான் அரசாங்கம் மேற்படி கடன் தொகையை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குகின்றது.

இது தொடர்பான அறிக்கையில் நிதி அமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் குனியோ தக்காஷி ஆகியோர் கைச்சாத்திட்டனர். (4-2)

# விமானப் படையினருக்கு இரு பயணிகள் விமானம்

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்கு இரண்டு பயணிகள் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

எம்.ஏ.60 ரக சீன தயாரிப்பு விமானங்கள் இரண்டிலும் தலா 56 பயணிகள் வீதம் சொகுசாக பயணிக்க முடியும்.

விமானப் படையின் ஹெலிடுவர்ஸ் விமான சேவைக்கு இவை பயன்படுத்தப்படவுள்ளன. இலங்கையிலுள்ள சீன தூதரக அதிகாரி வெங்சிங் சென் நேற்று முன்தினம் இரத்மலானை விமான நிலையத்தில் வைத்து இரண்டு விமானங்களையும் விமானப்படை தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரமவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். (4-2)

# பாலியல் தொந்தரவு செய்ய முயன்ற நபருக்கு 5 இலட்சம் ரூபா சரீரப்பிணை

இங்கிலாந்தைச் சேர்ந்த பெண்ணொருவரை பாலியல் ரீதியில் தொந்தரவுக்குட்படுத்த முயன்றதாக குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒருவரை ஐந்து இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று அனுமதியளித்தார்.

இச்சந்தேக நபர் கொழும்பு கோட்டையிலுள்ள தொலைத்தொடர்புக் கட்டடத்திற்கு அருகில் இருந்த இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கையில் இங்கிலாந்தைச் சேர்ந்த அப்பெண் கடந்த மாதம் 28 ஆம் திகதி சுற்றுலா பயணியாக இலங்கைக்கு வந்ததாக தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டு அறிக்கையின் படி புறக்கோட்டை பிரதான வீதியில் கடையொன்றுக்கு சென்ற இப்பெண்ணிடம் இலங்கையர்கள் மோசமானவர்கள் எனவும் இலங்கையர்களை நம்ப வேண்டாம் எனவும் சந்தேக நபர் தெரிவித்தார்.

அப்பெண் சந்தேக நபரை புறக்கணித்த போது அப்பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் கூறியுள்ளார்.

அப்பெண் கடையிலிருந்து வெளியே வந்த போது பின்தொடர்ந்து சென்ற சந்தேக நபர் தான் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் அப்பெண்ணின் நடத்தையில் சந்தேகம் இருப்ப தாகவும் அவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரிக்க வேண்டுமெனவும் தெரிவித்தாராம்.

அதன் பின் சந்தேக நபர் முச்சக்கர வாகனமொன்றில் அப்பெண்ணை பலவந்தமாக ஏற்ற முயன்ற போது அப்பெண் அழுததால் அயலில் இருந்தவர்கள் திரண்டனர்.

அப்போது இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் இருவரையும் பொலிஸ் ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

ஆனால் அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்குரிய புறக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டதாக புகாரிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரிக்கப்பட்டு சந்தேக நபரை ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் விசாரணையை எதிர் வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (4-2)







பொலிகை கலை இலக்கிய மன்ற பொது நூல்நிலையத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பொலிகை கந்தவன தேவஸ்தான ஆதீனகர்த்தா செவாலியர் திருமதி சிவயோக நாயகி இராமநாதன் நாடாவெட்டி கட்டத்தை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பொலிகண்டிச் செய்தியாளர்)

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



## ஆன்மீகம் 58

ஒவ்வொரு மனிதனும் அவனது திறமைக்கேற்றவாறு செயற்படவில்லையென்றால் பொருளாதாரம் உயராது. பொருளாதாரம் உயராத போது யாருக்கேனும் பாதிப்பு ஏற்படத்தான் செய்யும். இப்போது நம் நாட்டில் விவசாயிக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. நாளை நகரத்தில் உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அது மட்டும் நன்றாக இருக்குமா? பால் ஏழரை ரூபாய்க்கு விற்பதை 50 ரூபாய் என விலையை உயர்த்தினால் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் நன்றாக வாழ்வார்கள். பால்சாப்பிடுகிறவர்கள் நிலை? எல்லோரும் நன்றாக இருந்தால்தானே பொருளாதாரம் சரியாக இருக்கிறது என்று சொல்ல முடியும். எல்லோரும் நன்றாக இருக்க வேண்டுமென்றால் ஒவ்வொருமனிதனும் அவருடைய திறமையின்படி முழுமையாக உற்பத்தி செய்ய வேண்டும். இப்படி நடக்க வேண்டும் என்றால், தேவையான தொழில் நுட்பம், அமைதி, சமூகத்திற் சரியான சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். இன்னொரு முக்கியமான விடயம், அதற்குத் தேவையான உற்சாகம், ஊக்கம் வேண்டும். ஆனால், நமக்குகோ தூக்கம் வந்துவிட்டது.

## உற்பத்தியளவு மேலிடவேண்டின், தேவையான தொழில் நுட்பமும் அமைதியும் ஏற்ற சமூகச் சூழலும் அமைய வேண்டும்



ஒரு தலைவர்,“பெரிய வணிக நிறுவனங்கள் வருகிறது. அவர்கள் நம்மை எமாற்றி விடுவார்கள்.” என்று சொன்னார். அப்படி ஒன்றும் அவர்கள் நம்மை ஏமாற்ற முடியாது. ‘நாம்’ என்று ஒன்று சேர்ந்திருக்கிறோமே, சரியான ஒரு தலைவர் இருந்தால், யாரும் நம்மை ஏமாற்ற முடியாது. ஏனென்றால் நாம் உற்பத்தி செய்து கொடுத்தால்தானே அவர்களின் தொழில் நடக்கும். நாம் கொடுக்காமல் அவருக்கு எப்படிப்போகும்? ஒவ்வொரு விவசாயியும், ஒன்றரை, இரண்டு ஏக்கர் வைத்திருப்பதனால் திறைமை இல்லாமல் இருப்பதனால் நம்மை ஏமாற்ற முடியும். நாம் திறமையாக இருந்தால் எப்படி ஏமாற்ற முடியும்?

நான் கடந்த 20 வருடங்களாக கவனித்து வருகிறேன். ஒவ்வொரு வருடமும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் மஞ்சள் விலை, கரும்பு விலை என்னவென்று கேட்பேன். ஒவ்வொரு வருடமும் இதைக் கவனித்துப் பார்த்தால் ஏதோ சர்க்கஸ் போல இருக்கிறது. கரும்பு விலை எப்படியோ ஓரளவு நிலையாக இருக்கிறது. மஞ்சள் விலை சர்க்கஸ் தானே! இந்த வருடம் பக்கத்தில் உள்ள தோட்டத்தில் பயிரிட்டார்கள் நீங்களும் அதே பயிரிட்டீர்கள். அடுத்த வருடம் விளைச்சல் இல்லாமல் பயனற்றுப் போய்விட்டது. இது போன்ற சமயங்களில் அவர்களுக்குத் தேவையான அறிவுரை கிடைப்பதில்லை. எவ்வளவு மஞ்சள் பயிரிட்டால், நாம் விற்கமுடியும் என்று புரிகிற வகையில் சொல்கிற ஆட்கள் இல்லை. ஈஷா யோகா மையத்தில் இருந்து செய்ய வேண்டும் என்று முயற்சி செய்கிறோம். இப்பொழுது நாம் ஒவ்வொரு 25 கி. மீ இற்கும் ஒரு வானொலி நிலையம் உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறோம். அந்த வானொலியில் இந்த வருடம் என்னென்ன பயிரிட முடியும், நீங்கள் எந்தப் பயிர் இட்டால், அதற்கான சந்தை எப்படி இருக்கிறது? வெளிநாட்டில் எப்படி இருக்கிறது? என்பதை யெல்லாம் அறிவிக்க வேண்டும். இந்த விபரங்களெல்லாம் ஏற்கனவே இருக்கிறது. புதிதாக எதையும் கண்டு பிடிக்கத் தேவையில்லை. விவசாயியிடம் சென்று சேர்வதற்குண்டான கருவியை நாம் உருவாக்க வேண்டும். வானொலி மூலமோ அல்லது நேரடியாகவோ ஏதோ வகையில் விவசாயிக்குச் சென்று சேர்கிறமாதிரி உருவாக்கும் போது தான் என்ன பயிரிட வேண்டும்? எந்த அளவிற்கு வளர்க்க வேண்டும்? என்று விவசாயி அறிந்து செயற்பட முடியும்.

இதுபோன்ற கூட்டங்களில் பேசுவதற்குப்பதில், சில தலைவர்கள் ஒன்று கூடி என்னென்ன விடயங்களை விவாதிக்க வேண்டும் என்று தீர்மானித்தால் நானும் இதில் ஈடுபடத்தயாராகவுள்ளேன். நேரம் மட்டும் தான் பிரச்சினையாக இருக்கிறது.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# இலண்டன் ஓட்டகம்

## 02

வரலாறு மறக்கப்படுவதை விட மிகக் கொடுமையானது வராலாறு திரிக்கப்படுதல். கோயபல்ஸை முன்னுதாரணமாக் கொண்டு பொய்யைப் பலமுறை மீண்டும் மீண்டும் பரப்புரை செய்யும்போது அது உண்மையெனத் தோற்றம் அளிக்கும் அபாயமும் இங்கு சேர்ந்து கொள்கிறது.

.70 களின் ஆரம்பம் வரையில், தமிழ் நாட்டில் திராவிட இயக்கமும் அதனுடைய நீட்டப்பட்ட கைகளான அரசும், பொதுமக்களிடையே மொழி உணர்ச்சியைத் தூண்டி தமிழுணர்வை மீளக் கொணர்ந்தன என்பது உண்மை தான். ஆனால் இவ்வுணர்ச்சியை ஒரு ஊர்தியாகப் பயன்கண்டு தங்களுடைய அரசியல் பயணத்தை நடத்தின என்பதோடு அதன் பயனாய், வாய்த்த அரசியல் பதவிளையும், அதன் “பயன்”களையும் தக்கவைத்துக் கொண்டன. என்பதுதான் சமீபத்திய வரலாறு. ஆனால், அவ்வுணர்ச்சி சாமானிய மக்கள் மனதில் ஊதிக் கிளறப்பட்டு, அரசியல் ஆட்சித்தளத்தை ஈட்டித் தந்த அந்த மொழி உணர்வு, தமிழ் மொழியின் மேம்பாட்டை நோக்கி திசை திரும்பியதா என்றால்...இல்லை! பல நூற்றாண்டுகளாக பல்வேறு மத, இன, மொழி ஆக்கிரமிப்புக்களுக்கிடையேயும் தன்னை ஆரோக்கியமான மாறுதலுக்குட்படுத்திக் கொண்டு, நல்லவை தேர்ந்து அல்லவை தவிர்த்து, தன்னிடத்தைப் பாதுகாப்பாக தக்கவைத்துக் கொண்ட தமிழ்மொழிக்கு திராவிட இயக்க மொழி உணர்வு, வளர்ச்சியைத் தந்ததா என்றால்... இல்லை! இரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடிப்போம் என்று அறிவித்து விட்டு இறுதியில் அவை இரண்டுமே ஆங்கிலம், ஆங்கிலம் என்றாகிப்போனது. கல்வி நிலையங்களில் ஆங்கில வழி கல்வியொன்றினால் மட்டுமே வளமான வருமானம் கொண்ட எதிர்காலம் அமையும் என்கிற பொருளாதார இலக்குக்கு பலியாகி, பின் வந்த தலைமுறையினருக்கு தாய்மொழி குறித்த அக்கறையின்றிய சூழல் உருவெடுத்தது. அதே நேரத்தில் கல்வித் திட்டங்களும் அதற்கேற்றாற் போல அமைந்ததும் துரதிர்ஸ்டவசமானதே தங்கள் சந்ததியினர் அங்கில வழி கல்வி பெற்றாக வேண்டும். என்பதற்காக தமிழை ஒதுக்கியதும் சமீபத்திய

**“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”**

பதிவுதான். ஊடகங்களோ தமிழ் மொழியைப்பலியிட்டு தங்கள் கஜானாக்களை நிரப்பிக் கொள்ளும் வழியைத் தேடின. அக்ரோபர் 2007 யுகமாயினி இதழில் அரசியல் இலக்கியம் என்னும் தலைப்பில் எழுதும் நக்கீரன் சஞ்சிகையின் பிரதம துணை ஆசிரியர் கோ.வி. லெனின் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறார். “கதை, கவிதை, உரை நடை, நாடகம், திரைத்துறை எனப்பல தளங்களில் திராவிட இயக்கப் படைப்பாளிகள் அழுத்தமான தளங்களை கடந்த நூற்றாண்டில் பதித்திருக்கிறார்கள்... இப்போது தலைமையை பாராட்டி எழுதும் பதிய படைப்பாளிகள் மட்டுமே தென்படுகிறார்கள்... படைப்பிலக்கிய வாதிகளை திராவிட முன்னேற்றக் கழகத்தில் தேடவேண்டியிருக்கிறது. இன்றைக்குத் திராவிட இயக்கத்தாரிடம் ஊடகங்கள் இருக்கின்றன. படைப்பாளிகள் இல்லை. வாய்ப்புக்கள் இருக்கினறன. நோக்கமும் இலக்கும் இல்லை! படைப்புலகம் என்பது தேவையற்றதாகி, பொருளாதாரமே பிரதானம் என்கிற நுகர்வுக் கலாசாரம் மேலோங்கி அதற்கான பாதையாக மட்டுமே அரசியல் குறிகிப்போனதால் உருவான நிலமை இது...” Best கண்ணா Best என்றாலோ Number One நாழிதழ் என்றாலோ, ஆச்சரியப்படத் தேவையில்லை இப்போது.

இதற்கு மத்தியில் ‘தமிழைக் காப்பாற்றுவோம்’ என்கிற கோசங்களுக்கும் குறைவில்லைத்தான். இங்கு மனதில் எழும் கேள்வி - எந்தத் தமிழை? கணையாளி இதழின் கடைசிப் பக்கங்களில் பத்தி எழுதி வந்த எழுத்தாளர் சுஜாதா ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். “இந்தப் பத்திரிகை நான் காசு கொடுத்து வாங்கியது” என்கிற வாக்கியத்தை தொல்காப்பியர் இன்று செவிமடுத்தால் “இது என்ன மொழி” என்று கேட்டிருப்பார். இச்சொற்றொடரில் உள்ள எந்த வார்த்தையுமே தொல்காப்பியர் காலத் தமிழ்ப் பயன்பாட்டில் கிடையாது என்று அவர் சொல்லுவது முற்றிலும் உண்மையே. “சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன் யாண்டுளனோ என வினவுதி” என்பதாக நான் இன்று பேசினால், எனக்கு மனநிலை பிறழ்ந்ததோ என்று பலரும் சந்தேகப்படக்கூடும். 300-400 ஆண்டுகளுக்கு முன்னால் பொறித்ததாக அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட கல் வெட்டுக்களின் தமிழை நம்மால் வாசிக்க முடியாது. அதற்கென வட்டெழுத்துப் பயிற்சி பெற்ற வல்லுநர்களின் உதவியோடு நமக்கு இன்று புழக்கத்திலுள்ள தமிழுக்கு பெயர்க்கப்பட்டாலொழிய! சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாரதியும் புதுமைப்பித்தனும் எழுதிய உரைநடையை நாம் புரிந்து கொண்டாலும்கூட (அடுத்து வரும் தலைமுறைகளுக்கு இதுவும் புரியுமோ என்பது சந்தேகமே) இப்போது வாசிக்கும் நாம் என்ன இது என்றும் திகைக்கிறோம்.

(தொடரும்)

**யுகமாயினி சித்தன், தமிழ் நாடு**

# சமூக,பொருளாதார தரவுகள்-2011

## மத்திய வங்கியால் வெளியீடு

இலங்கை மத்திய வங்கி இலங்கையின் சமூகப் பொருளாதார தரவுகள்-2011 என்ற அதன் அண்மைய தரவேட்டினை தற்பொழுது வெளியிட்டு இருக்கின்றது. இத்தொடரில் இது 34-வது தொகுதியாகும்.

இத்தொகுதி இலங்கையின் சமூகப் பொருளாதார நிலைமைகள், மனித வளங்கள், தேசிய கணக்குகள், வேளாண்மை, கைத்தொழில், பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு விலைகளும் கூலிகளும், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலா, வெளிநாட்டு நிதி இறைத்துறை மற்றும் நிதியியல் துறை தொடர்பான ஆகப் பிந்திய தகவலை உள்ளடக்கிய 88 புள்ளி விபர அட்டவணைகளையும் 12 வரைபடங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.


இவ்வெளியீட்டில் ஆகப் பிந்திய தரவுடன் 2010ஆம் ஆண்டிற்கான ஆகப்பிந்திய மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி புள்ளிவிபரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தொகுதி முக்கிய சமூக பொருளாதார மாறிகள் தொடர்பாக சார்க் மற்றும் தென்கிழக்காசிய பிராந்திய நாடுகளின் ஒப்பீட்டு தரவுத் தொகுதி ஒன்றினையும் தருகின்றது.

இத்தரவு ஏடானது தற்போது ஈடுபாடு மிக்க விடயங்களான பரந்தளவில் சமூகப பொருளாதார தரவின் அனேகமானவற்றை சுருக்கமான முறையில் தருகின்றது. எனவே இது கொள்கை வகுப்போர் ,ஆராய்ச்சியாளர்கள் ,கல்விமான்கள், மாணவர்கள் , மற்றும் பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் இவ்வெளியீட்டின் ஆங்கிலம் பிரதி ஒன்று ரூபா 100 ஆகவும், தமிழ்/சிங்களம் பிரதி ஒன்று ரூ.30 ஆகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதோடு இதனை யாழ்ப்பாணம் உள்ளிட்ட மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.




## சம்பத்திலிருந்து கார்கில்ஸ் சென்றார் ஹரிஸ் பிரேமரத்ன



சம்பத் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளராக இருக்கும் ஹரிஸ் பிரேமரத்ன 2011 டிசம்பர் 31-ம் திகதியிலிருந்து தனது பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளார்.

இது தொடர்பாக கடந்த வாரம் கூடிய சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபை,தற்போது பிரதி முகாமைத்துவப் பணிப்பாளராக இருக்கும் எம்.வை.ஏ.பெரேராவை புதிய முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிப்பது என ஏகமனதாக முடிபு செய்துள்ளது.

இதேவேளை சம்பத் வங்கியிலிருந்து விலகிய ஹரிஸ் 2012 ஜனவரி முதல் கார்கில்ஸ் இன் புதிய வங்கியில் இணையவுள்ளார்.

42 ஆண்டுகள் வங்கித்துறை அனுபவத்தைக் கொண்ட ஹரிஸ், ஆஸிரி ஹொஸ்பிட்டல் மற்றும் சொப்ற்லொஜிக் நிறுவனங்களின் பணிப்பாளராகவும் உள்ளார்.

## 3500 பேரை பணி நீக்குகிறது நோக்கியா

மொபைல் தயாரிப்பில் முன்னணி நிறுவனமான நோக்கியா, 3500 பேரை பணி நீக்கம் செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

ருமேனியா, ஜேர்மனி, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் 4 ஆயிரம் பேரை பணிநீக்கம் செய்யப்போவதாக அறிவித்த சில மாதங்களிலேயே தற்போது மேலும் பலரைப் பணிநீக்கம் செய்யவுள்ளதாக நோக்கியா அறிவித்துள்ளது.




2011 ஆம் ஆண்டு இறுதி முதல் ருமேனியா தனது உற்பத்தி ஆலையை மூட நோக்கியா தீர்மானித்துள்ளது. அது மட்டுமன்றி ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளதனது ஆலையையும் மூடவுள்ளது. அத்துடன் அடுத்த அண்டு முதல் கூடுதலாக ஆட்குறைப்பு செய்ய நிறுவனம் முடிபு செய்துள்ளது. இந்த உற்பத்தி ஆலைகளை ஆசிய நாடுகளுக்கு மாற்ற நோக்கியா தீர்மானித்திருப்பதால் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் உள்ள ஆலைகளை மூடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய நிறுவனங்களில் 10 ஆயிரம் அமெரிக்கருக்கு வேலைவாய்ப்பு

அமெரிக்காவில், இந்திய நிறுவனங்களில் அந்நாட்டைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது. கடந்த 2005-ம் ஆண்டு முதல் இந்திய நிறு வனங்களின் நேரடி முதலீடு சராசரியாக ஆண்டுக்கு 33 சத வீதம் அதிகரித்து வருகின்றது. கடந்த 2000 இல் ரூ.470 கோடியாக இருந்த இந்திய முதலீடு, 2010இல் 16 ஆயிரத்து 170 கோடி இந்திய ரூபாயாக அதிகரித்துள்ளது.




அதேவேளை அமெரிக்க நிறுவனங்களின் இந்திய முதலீடு ரூ.11 ஆயிரத்து 760 கோடியிலிருந்து ரூ.1. 33லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6734.60 | 6783.55 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6023.93 | 6045.11 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 9,497.56

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ஏசியன் அலைன்ஸ்(358.50), சிங்கர் இன்ட் (384.10), இன்டஸ்ரியல் அஸ்ப்(786.90),ஹரிச்சந்திர(2400.00), றீஜின்(440.20)

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** அலுபா(58.40),சதொச மோட்டார்ஸ் (340.00), ரன்ஜரின்(86.20), ஹெஸ்ரனர்(374.00), ஹொரன(40.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk



முல்லைத்தீவில் கடந்த வாரம் ஹற்றன் நஷனல் வங்கியின் கிளையொன்று திறந்து வைக்கப்பட்டது. வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜோனதன் அலெஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கிளையை திறந்து வைத்து உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.41 | 111.05 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 170.02 | 173.96 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 147.35 | 151.38 |
| சுவிஸ் பிராங் | 120.62 | 124.54 |
| கனேடிய டொலர் | 104.64 | 107.79 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.92 | 109.44 |
| சிங்கப்பூர் டொலர் | 83.74 | 86.15 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.46 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.24 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.00 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## கடன் தரப்படுத்தல் என்றால் என்ன?

நிறுவனங்கள் தமது செயற்பாட்டுக்குத் தேவையான நிதி முதலினை, உரிமை நிதியாக அல்லது கடன் நிதியாக அல்லது இரண்டும் இணைந்ததாக திரட்டிக் கொள்கின்றன. பொதுவாக பல்வேறுபட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கடன் வழங்கும் நிறுவனங்களினால் வேறுபட்ட கடன்கள் வழங்குகின்றன.

இச்சந்தர்ப்பத்தில் கடன் வழங்கும் நபர் அல்லது நிறுவனம் கடன் பெறும் நபரின் அல்லது நிறுவனத்தின் நம்பகத்தன்மையினை (Credibility) உறுதிப்படுத்திக் கொள்ளுதல் இன்றியமையாதது. இவ் உறுதிப்படுத்தல்கள் வேறுபட்ட தோற்றப்பாடுகளின் அடிப்படையில் அமையப்பெறலாம்.

அதாவது உடமைகளை பிணையாகக் கொடுத்து கடன் திரட்டப்படும் சந்தர்ப்பங்களில் கடனை மீட்க முடியாதுபோனால் பிணையாகக் கொடுத்த சொத்துகளை இழப்பதன் ஊடாக அல்லது அவற்றினை விற்பனை செய்வதன் ஊடாக கடன் பொறுப்புகளில் இருந்து நீங்கிக் கொள்ள முடியும்.

மாறாக வாக்குறுதிகளை மட்டும் வழங்கி கடன்பத்திரங்கள் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அதனைப் பெற்றுக் கொண்டவர்கள் அதாவது கடன் கொடுத்தவர்கள், கடன் வாங்கிய நபர் அல்லது நிறுவனம் வாங்கிய கடன் பத்திரத்திற்கான முதல் மற்றும் வட்டியினை உரிய காலத்தில் மீளச் செலுத்தும் உயரிய ஆற்றலினை உறுதிப்படுத்தல் வேண்டும். இது நிறுவனங்களின் கடன் தீர்க்கும் ஆற்றல் (Creditworthiness) எனப்படும்.

இங்கு கடன் தீர்க்கும் ஆற்றல் கடன் தரப்படுத்தல் (Credit rating) ஊடாக உறுதிப்படுத்தப்படுகின்றது. கடன் தரப்படுத்தல் என்பது நபர் அல்லது நிறுவனம் கடன் தீர்க்கும் ஆற்றலினை தரப்படுத்தி உறுதிப் படுத்தி வழங்குகின்ற ஒருவகையான சான்றிதழாகும்.

இச்சான்றிதழ் பொதுவாக நிறுவனத்தின் கடந்த கால நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்கால சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்து நீண்ட மற்றும் குறுங்கால அடிப்படையில் கடன் தரப்படுத்தல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது.




**கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள் (Credit Rating Agencies)**

இலங்கை கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக பதிவு செய்யப்பட்டு செயற்படும் கம்பனிகளின் கடன் தீர்க்கும் ஆற்றலினை தரப்படுத்தி உறுதிப்படுத்தல்களை வழங்கும் நோக்கில் இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவின் அனுமதியுடன் தன்னிச்சையாக செயற்படும் நிறுவனங்கள் கடன் தரப்படுத்தல் முகவர்கள் எனப்படும்.

இலங்கையில் கடன் தர உறுதிப்படுத்தல்களை வழங்க **Fitch Rating Lanka** மற்றும் **RAM Rating Lanka** நிறுவனங்கள் கடன் தரப்படுத்தல் முகவர்களாக செயற்படுகின்றன.

**தரக் குறியீடுகள் (Rating Code)**

நிறுவனங்களின் கடன் தீர்க்கும் ஆற்றலினை மதீப்பீட்டு எல்லைகளுக்கு அமைவாக (Scales) குறியீட்டு ரீதியாக வகைப்படுத்தி ஒரே பார்வையில்வெளிப்படுத்தும்அளவீடு தரக் குறியீடு எனப்படும். உதாரணமாக செலான் தற்போது வங்கி - (A-) எனவும், இலங்கைக்கான தரக் குறியீடு -(BB-) எனவும் குறிப்பிட முடியும்.

பொதுவாக நீண்டகால கடன் பிணைப்பத்திரங்களுக்கான கடன் தரப்படுத்தல்AAA தொடக்கம் D வரை அமைந்து காணப்படும். இங்கு AAA தரக் குறியீடானது அதி உயர் கடன் உத்தரவாதத்தினையும் D தரக் குறியீடானது முழுமையான கடன் நட்ட அச்சத்தினையும் உணர்த்தி நிற்கின்றது. (மேலதிக தகவல்களுக்கு www.ram.com.lk)

**முக்கியத்துவம் Importance**

கடன் தரப்படுத்தல் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற நிதி நிறுவனங்கள் தொடர்பான தரக் குறீயீடுகள் அந்நிறுவனத்தின் நற்சான்றிதழ்களாகக் கொள்ள முடியும். குறிப்பாக நிதி நிறுவனங்கள் தமது முதல் நிதியினைப் போல் பல மடங்கு நிதியினை கடனாக வழங்குகின்றன. கடனாகப் பெறுகின்றன (வைப்புகள்). சில சமயங்களில் கடன் எல்லைகள் நிறுவனங்களின் இயலுமைக்கு அப்பால் பட்டதாக அமையும் நிறுவனங்கள் தமது சமச்சீர் தன்மையினை இழக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

எனவே நாம் பணத்தினை வைப்புச் செய்கின்ற மற்றும் பங்குகளில் முதலீடு செய்கின்ற சந்தர்ப்பங்களில் தரக்குறீயீடுகளை உறுதிப்படுத்தல் மிகவும் அவசியம் மேலும் ஒவ்வொரு காரணிகளையும் தொடர்புபடுத்தி தரக்குறீயீடுகளின் முக்கியத்துவத்தினை விபரிக்க முடியும். இருந் தும் ஆக மொத்தத்தில் சிறந்த முதலீட்டுத் தெரிவு அடையாளமாக நாம் பயன்படுத்த முடியும்.

**தொகுப்பு: மு.திலீபன்**
**கொழும்பு பங்குப்பரிவர்த்தனை**

# அரசியல் இலாபங்களுக்காக கனடா செயற்பட்டு வருகின்றது

## அமைச்சர் பாலித தெரிவிப்பு

உள்நாட்டு அரசியல் இலாபங்களுக்காக கனடா இலங்கையை பலிக்கடாவாக்கக் கூடாது என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹணே தெரிவித்துள்ளார்.

கனேடிய வாழ் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து இலங்கைக்கு எதிரான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசல் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு அரசியல் நலன்களை அடைவதற்காக இவ்வாறு சர்வதேச ரீதியில் பிறிதொரு நாட்டின் மீது குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக உலக நாடுகள் அழுத்தங்களை பிரயோகித்து வருவதனைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் நிதி திரட்டல் நடவடிக்கைகளில் தீவிர முனைப்பு காட்டி வருவதாக அரச புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையை விமர்சனம் செய்யும் கனடா, சட்டவிரோத குடியேற்றக்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை தடுப்பதற்கு பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் எடுத்து வரும் நடவடிக்கை பாராட்டுக்குரியது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. (4-2)

# படையதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்படின் பாதுகாக்க நடவடிக்கை

## சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

படை அதிகாரிகளாகக் கடமையாற்றி தற்போது இராஜதந்திர பதவிகளை வகிக்கும் அதிகாரிகளின் மீது கூடுதல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இவர்களுக்கு இராஜதந்திர வரப்பிரசாதங்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே வெளிநாடுகளில் குறித்த படையதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படையதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டால் அவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இலங்கை இராஜதந்திரிகளுக்கு எதிராக பிரயோகிக்கப்படும் அழுத்தங்களைப் போன்றே குறித்த நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளுக்கு எதிராகவும் அழுத்தங்களை பிரயோகிக்க நேரிடும் என நினைவுபடுத்த விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அழுத்தங்களை பிரயோகிக்கும் நாடுகளுக்கு உரிய தெளிவுபடுத்தல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் போலியான பிரசாரங்களுக்கு அடிமையாகியுள்ள தரப்பினரை தெளிவுபடுத்துவது சுலபமானதல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-2)

# ஜனாதிபதி குறுகிய மனப்பான்மையும் தாழ்வு மனப்பான்மையும் கொண்டவர்

## சோமவன்ச கூறியதாக விக்லீக்ஸ் தகவல்



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறுகிய மனப்பான்மையும் தாழ்வு மனப்பான்மையும் கொண்டவர் என்று சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதர் பற்றீசியா புட்டினிஸ் உடனான சந்திப்பொன்றின்போதே ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச மேற்கண்டவாறு தெரிவித்திருந்ததாக அவர் இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பியிருந்த இரகசிய கேபிள் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது தொடர்பான தகவல்களை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செல்வாக்கானதும் மக்களால் மதிக்கப்படுவதுமான பரம்பரையொன்றிலிருந்து அரசியலுக்கு வராதவர் என்பதன் காரணமாக அவருக்குள் தாழ்வுமனப்பான்மையொன்று நிலவுவதாகவும் அத்துடன் அவர் கல்விமான்கள் உள்ளிட்ட அனைவர் மீதும் சந்தேக மனப்பான்மை கொண்டவராக இருப்பதாகவும் அந்தச்சந்திப்பின் போது சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்போது இலங்கையின் ஐக்கியம் மற்றும் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டிருந்ததாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (4-2)

# ரத்வத்தேயின் ஊழல் மோசடி வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தேவிற்கு எதிரான ஊழல் மோசடி விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ரத்வத்தே சுகவீனமடைந்துள்ள காரணத்தினால் விசாரணைகளை ஒத்திவைப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை குவித்துள்ளதாக ஜெனரல் ரத்வத்தேவிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஐம்பது கோடிக்கு மேற்பட்ட சொத்துக்கள் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் குவிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரத்வத்தேயின் உடல் நிலை பற்றி மருத்துவ அறிக்கை ஒன்றை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் சுனில் ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். (4-2)

# பரிசளிப்பு விழா நிகழ்வு

(சாவகச்சேரி)

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி க. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி. அ.சாந்தசீலன் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவி திருமதி க. பரணீதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (4-12-29)




★ 1535-ஜாக் கார்ட்டியே மொண்ட்றியாலைக் கண்டுபிடித்தார்.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படையினர் வேர்ஜீனியாவின் சால்ட்வில் நகரைத் தாக்கினர். ஆனாலும் அவர்கள் கூட்டமைப்பினரால் விரட்டப்பட்டனர்.

★ 1870-ரோம் மீண்டும் இத்தாலியுடன் இணைவதற்கு ஆதரவாக மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்தனர்.

★ 1903-யாழ்ப்பாணத்தில் Jaffna Steam Navigation Company என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான SS Jaffna என்ற பயணிகள் கப்பல் தனது வெள்ளோட்டத்தை ஆரம்பித்தது.

★ 1946-பல்கேரியா கம்யூனிஸ்டுகளின் வசமாகியது.

★ 1958-கினி பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1968-மெக்சிகோவில் இடம்பெற்ற மாணவர்களின் அமைதிப் போராட்டத்தின் முடிவில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

★ 1992-பிரேசிலில் சிறைக்கைதிகளின் போராட்டம் ஒன்றின் போது 111 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1996-பெருவில் விமானம் ஒன்று பசுபிக் பெருங்கடலில் வீழ்ந்ததில் 70 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2005-நியூயோர்க்கில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-பென்சில்வேனியாவில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் 5 மாணவிகள் கொல்லப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

★ 1904-லால் பகதூர் சாஸ்திரி, இந்தியப் பிரதமர் (இ.1966)

★ 1908-டி.வி.இராமசுப்பையா, தினமலர் நாளிதழின் நிறுவுநர் (இ.1984)

★ 1925-ஆன் ரணசிங்க, ஆங்கிலேய யூதப் பெண் எழுத்தாளர்

★ 1965-டொம் மூடி அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்

★ 1906-ராஜா ரவிவர்மா, இந்தியாவின் பிரபல ஓவியர் (பி.1848)

★ 1980-சேர் ஜோன் கொத்தலாவல, இலங்கை அரசியல் தலைவர்


★ 1975-தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் காமராஜ ரின் நினைவு தினம் (பி.1903)

**சிறப்பு நாட்கள்**

★ இந்தியா- காந்தி ஜெயந்தி

★ கினி- சுதந்திரதினம் (1958)

★ அனைத்துலக வன்முறையற்ற நாள்



★ 1869- இன்று மகாத்மா காந்தியின் பிறந்த தினம் (இ.1948)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### வேண்டும் வரம்

மீண்டும் ஓர் பிறவி
வேண்டும் எனக்கு தமிழனாய்
மூத்த தமிழ் என
மூதாதையர் போற்றி வரும் என்
முத்தமிழே உன்னை முத்தமிட்டு
மனதார வேண்டுகின்றேன்
மீண்டும் ஓர் பிறவி...
நிமிர்ந்த நடை நேர்கொண்ட
பார்வையோடு
நடுநிசியிலும் நடு வீதியில்
உரிமையுடன் உலாவர
வேண்டுகின்றேன் ஓர் பிறவி...
அழுகுரல்கள் ஓய்ந்து
அயலாருடன் அகமகிழ்வாய்
அளவளாவி பயமின்றி வாழ்ந்திட
வேண்டுகின்றேன் ஓர் பிறவி...
கெட்டழிந்து போகுமென்
கலாசாரமதை கட்டிக்காத்து
கனிவான தமிழே உனை வாழ வைக்க
வேண்டுகிறேன் ஓர் பிறவி
மீண்டும் தமிழனாய்

யாழ்நிலா
யாழ்ப்பாணம்.

### நியாயத்திற்காய்...

நித்திலத்தில் யுத்தமென்னும்
பேரரக்கன் தங்குவிட்ட
வடுக்களின் நினைவுகள்
நெஞ்சினைவிட்டு அகன்றிட–முன்னே
சத்தமின்றியே எம்கதை
முடிக்க எழுந்திட்ட
மர்மமனிதன்
முடிச்சுக்கள் இங்கே
அவிழ்க்கப்படுமா? இல்லையேல்
எம்மவர் கழுத்தினில்
இறக்கப்படுமா?

கி.சரண்யா
தாவடி

### இழக்கமாட்டோம்

கண்மூடித் திறக்கையில்
எங்கள் உறவுகளை
இழந்தோம்– இழப்பு
எங்களை விடவில்லை
துரத்திக் கொண்டே வந்தது
இனியும் நாம் இழப்பதற்கு
உறவுகள் எம்மிடம் இல்லை
ஆனால் நம் பூமித்தாயை– ஒரு
நாளும் இழக்கமாட்டோம்
அவள்தான் நம் அனைவரினதும்
தாயாவாள்!

கி.சுபாஜினி
குமரன்புலம், மூளாய்

### அவரவர் பார்வையில்

குழந்தை
கள்ளங்கபடமற்ற
புன்னகையதனால்
கவலைகள் தீர்க்கும்
அமுதசுரபி
நூல்கள்
அறிவை மேம்படுத்தும்
ஆசானாய்
வாழ்வை வழிப்படுத்தும்
சிநேகிதனாய்
நம்முடனே வாழ்பவை
ஆசிரியர்
இருண்ட வாழ்வில்
ஒளியேற்ற
கல்வியெனும்
அணையாத தீபத்தை
ஏற்றி வைப்பார்கள்

ஆஷா
யாழ்ப்பாணம்.

தாய்மை
பெண்ணின் பெருமையை
உணர்த்தும் புனிதமான
உறவு
நட்பு
ஆழ்கடலிலே உன்னைவிட
என்னுடைய நட்பு
ஆழமானது

பொ.இளவரசி
பருத்தித்துறை

### தடுமாறும் இரவுகள்

எப்போது இரவுவரும்
எப்போது மின்சாரம் தடைப்படும்
எத்தனை... எத்தனை
முகந்தெரியா விம்பங்கள்
எம் கதவை முட்டி மோதும் ஓசையிலே
நிசப்தம் தாண்டிய கூக்குரலால்
உதவிட ஓடிவரும் கரங்கள்
முறிக்கப்படும் துர்ப்பாக்கிய நிலைகளோடு
பெண்மையின் கனவுகள்
கண்ணீரில் விதியெழுதும்
அர்த்தராத்திரிகளில்...
குழந்தைகள் முதல் முதியவர் வரை
மரணத்தின் விளிம்பை
தொட்டுத் திரும்பும்...
உண்மையின் கதை எழுது
பிரம்மன் யாரைத்தான்
தூதனுப்பப் போகிறானோ...?
அதுவரை...?
தடுமாறும் இரவுகளாய்... எம் கண்கள்
அழுது வடிந்து கொண்டேயிருக்கும்

இனியவன்

### நட்புடன்

என் நட்பின் சிகரம் அவள் மீது
கொண்டிருக்கும் பாசம் கண்டு
நீ வியக்கின்றாயே! என் உயிர் நீ
உன் மீது இருக்கும்
பாசம் தனை சொல்ல
வார்த்தை கோடி

ராஜி

### இமயம் தொட...

உன் வாழ்வில்
ஆயிரம் இன்பங்களை
சுவைப்பாயினும்
நீ கல்வி எனும் இன்பத்தை
சுவைக்காவிடின்
உன் வாழ்வு
இருண்ட குகைக்குச் சமம்
கற்றார் கண்ணுடையார்
கல்லாதார்
முகத்திரண்டு புண்ணுடையார்

மாவை நா.கஜேந்திரன்

### தேடும் விழிகள்

வாழ்விழந்த எம் வாழ்வில்
வசந்தங்கள் வீச வேண்டாம்
நாளாந்த விடியல்களே
எமக்குப் போதும்

ஆண்டுகள் கடந்தாலும்
நீண்டு தொடருமெங்கள்
நிர்க்கதியான வாழ்வில்
நிறைவுகள் எப்போது

அந்தரித்துப் போனதுயர்
அங்கங்களை இழந்தோம்
மழலைகளை இழந்தோம்
கணவரையும் இழந்தோம்
வலுவிழந்து போனோம்
விதவைகளாய் ஆனோம்

யுகம்யுகமாய் வாழ்வல்ல
நூற்றாண்டு வாழ்வுமல்ல
மனம் நிறைந்த வாழ்வை
மண்ணுலகில் தேடுகிறோம்
வாழமட்டும் எங்களை
மகிழ்வுடன் வாழவிடுங்கள்

அ.பூவானந்தன்
வயாவிளான்.



## மௌனத்தின் தேடல் – 90

### கருணை

செல்வர் வறியவர்
சமத்துவம் பேசும்
நிஜ புகைப்படமா?
நாடக பாத்திரமா?
ஏழைக்கு இரங்கும்
உன்னத பிறவியே
உயர்ந்த மனிதன்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### மாற்றம்

பாலூட்டி வளர்த்தாள் தாய்
இன்று சோறு ஊட்டி
காக்கிறான் மகன்

அ.அன்பரசன்
கறுக்காய்

### யார் நீ?

முல்லைக்கு தேர் கொடுத்தான்
அன்றொரு பாரி
ஏழைக்கு உணவு ஊட்டினான்
இன்றொரு பாரி
கொடுத்ததால் அவன் வள்ளல்
ஊட்டியதால் வள்ளலை வென்ற
வள்ளல் நீ...?

நெய்தல்
தேன்மொழி

### பாதசாரியின் உணர்வு

வீதியில் தனது உயிருக்காக
போராடும் இந்த
உத்தம தாய்க்கு
வீதியில் செல்லும்
பாதசாரிக்கு
இருக்கும் உணர்வு கூட
பெற்ற பிள்ளைகளுக்கு
இல்லையே

ஜெ.டெனீஸ், குளமங்கால்

### அன்பு

உயிர்களிடத்தில் அன்பு காட்டு
உலகம் உன் மீது அன்பு காட்டும்
பணம் இன்று போய் நாளை வரும்
இரக்கம் உள் இருந்தால் தான்
வெளிவரும்

சங்கர், அன்னசத்திரலேன்

### மனித நேயம்

மனிதநேயம் என்னும் பண்புக்கு
மாண்பு சேர்க்கும் செயற்பாடு
உணவற்ற உண்ணமுடியாத ஏழைக்கு
உணவு கொடுத்து ஊட்டி மகிழ்கிறது
ஆறறிவு மனிதனின்
ஜீவகாருண்யச் செயற்பாடு
உலக மக்களுக்கு மேலும்
ஓர் எடுத்துக்காட்டு
மனிதநேயம் சாகவில்லை
மனிதப்பண்பு அழியவில்லை

சொ.தர்மகுலசிங்கம்
நாயன்மார்க்கட்டு

### மனிதம் மடியவில்லை

ஏழை வடிவம் இறை வடிவம்
இரக்கம் காட்டி ஈகை செய்தல்
இன்பம் விளையும்
ஈடிணையில்லை
உணவு ஊட்டிடும் உன்னத கரங்கள்
பூசை புரியும் புனித கரங்கள்

ஜெ.சஞ்சீவன், பண்ணாகம்.

### உள்ளம்

கையில் உணவிருக்க
உண்ணமுடியாது தவித்திடும்– ஏழைக்கு
எடுத்து ஊட்டுவது
உதவிக் கரங்கள்–அல்ல
அன்பு உள்ளங்கள்

சி.சசி, யாழ்ப்பாணம்
சிறுவர் இல்லம்.

### தர்மம்

உலகம் உருண்டோட
உன்னதம் நிலைத்திட
உத்தமம் பெற்றிட
உலக தர்மம் வேண்டி
நிற்கின்றோம்

யோ.யாழவன்
யா.நெல்லியடி.ம.ம.வி

### நேசிக்கும் மனிதம்

விழிகளை விட்டு– அக
விழிகளால் பார்த்து
மனிதத்தை நேசிக்கும்
உன்னால் தான்
கலியுகத்திலும்
மனிதம்– இன்னும்
மரணிக்காமல் இருக்கிறது

ஸிந்தா.வி
வடகோப்பாய்

### மானிடம்

மனிதத்தின்
மகத்துவத்தை
பாரிற்கு
பறைசாற்றும்
மாண்புமிகு மானிடம்...!

வ.வாமணன்
பருத்தித்துறை

### மாண்புமிகு மனிதனே

வர்க்கபேதமின்றி உணவூட்டும் மனிதா!
இவ் வையத்திலுள்ள வறியவருக்கு–உயிர்
மூச்சுக் கொடுக்கும் செல்வந்தனே
இரக்கமற்று சமவுடைமை இல்லாது வாழும்
மனிதருக்கோ நீ ஒரு எடுத்துக்காட்டு

யோ.மீரா
நெல்லியடி.


### மானிடம் மரிக்காது

பெற்றவரை சிரமமென
முதியோர் இல்லத்தில்
பரிதவிக்கும் மானிடர் மத்தியில்
பெற்றவரை தெய்வமாய் கருதும்
உம்போன்றோர் வாழ்வதாலேயே
உயிருடன் உள்ளது உலகமே

என்.துஷி
சிறுவர் இல்லம்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 91

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 07.10.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தமிழ் மக்களுக்கான நல்லாக்க செயற்பாடு குறித்து ஆர்வத்துடன் அவதானித்து வருகிறேன்

## கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்களின் பொறுப்புடைமை தொடர்பிலும் தமிழ் மக்களுக்கான நல்லிணக்க செயற்பாடுகள் குறித்தும் மிக ஆர்வத்துடன் அவதானித்து வருவதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிடம் தாம் கூறியுள்ளதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் குறிப்பிட்டுள்ளார்.**



இலங்கை உள்ளிட்ட உலகம் முழுவதும் மனித உரிமை தொடர்பில் பேசுவதற்கும் குரல் கொடுப்பதற்கும் கனடா தயாராகவே உள்ளது என அவர் கனேடிய பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல் குறித்து இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றவாளிகளை கைதுசெய்து சர்வதேச நீதிமன்றில் ஆஜர் செய்யும் வரை பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து இலங்கையின் உறுப்புரிமையை நீக்குமாறு கனேடிய பிரதமரிடம் அந்நாட்டு பாராளுமன்றில் நேற்று முன்தினம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கனேடிய எதிர்க்கட்சித் தலைவரான ஜிம் கரிய ஜியானி அந்த நாட்டு பிரதமர் ஸ்டீவ் ஹாபரிம் கோரிக்கை விடுத்திருந்தார். இதே வேளை நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் இது குறித்து அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் வினவியபோது, பொறுப்புடன் செயற்படாதபோது எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய கூட்டத் தொடரில் பங்குபற்றுவதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்க நேரிடும் என கனேடிய பிரதமர் அறிவித்திருந்ததாக கூறினார்.

அது தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டினை அந்த நாட்டிலுள்ள தூதுவர் கனேடிய வெளிவிவகார அமைச்சுக்கு மிகத் தெளிவான முறையில் முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். அத்துடன் இந்த விடயங்களை எதிர்கொள்ளும் சக்தி இலங்கைக்கு உள்ளதுடன் எவ்வித பிரச்சினைகள் ஏற்படப் போவதில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் கூட்டத் தொடர் நடத்தப்படுவது தொடர்பில் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றமை தொடர்பில் இதன் போது கருத்து வெளியிடப்பட்டது.

அனைத்து நாடுகளும் இணங்கியே இலங்கைக்கு 2013 ஆம் ஆண்டை வழங்கியுள்ளதுடன் அந்த நிலைப்பாட்டிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்கான இயலுமை கனடாவுக்கு இருப்பதாக தெரியவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுமார் மூன்று இலட்சத்து 50 ஆயிரம் முதல் நான்கு இலட்சம் வரையான புலம் பெயர்ந்து வாழ்கின்றவர்கள் கனடாவில் உள்ளதுடன் அந்த நாட்டிலேயே புலம் பெயர்ந்த அதிகமானோர் வாழ்கின்றனர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (4-2)

# வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணியில் உள்ள சப்ரா கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் தினமும் வாணி விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்வி நிறுவன மண்டபத்தில் கு.சுவர்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை சித்தங்கேணி சிவன் தேவஸ்தான சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள், தென்னிந்திய திருச்சபை வணபிதா அன்ரனி அடிகளார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அத்தோடு ஆசிரியர்,தரம் 5 புலமைப் பரிசில் வெற்றியீட்டிய மாணவர்கள் ஆகியோருக்கான கௌரவிப்பும் இடம்பெறும். (4-12)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் வாணிவிழா விசேட நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கோண்டாவில் சிவபூமி மண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோண் மணி சண்முகதாஸ், சிறப்பு விருந் தினர்களாக நெல்லியடி வர்த்தக வங்கியின் திரு. திருமதி கஜன் தம்பதிகளும் கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளனர். (4-8)

# தொல்புரம் பிரதேசத்தில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்விற்குமான செயற்றிட்டத்தினால் தொல்புரம் பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரை தொல்புரம் ஜே/163 கிராம சேவை அலுவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம், சங்கானைப் பிரதேச செயலகம், வலயக்கல்விப்பணிமனை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி, மானிப்பாய் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பொலிஸ் நிலையம், பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கடற்றொழில் திணைக்களம், விவசாயத்திணைக்களம், மானிப்பாய் பிரதேசசபை, மின்சாரத்திணைக்களம் போன்ற நிறுவனங்கள் தமது சேவையினை வழங்கவுள்ளன.

எனவே மேற்படி நடமாடும் சேவையில் இப்பிரதேச மக்கள் பங்கு கொண்டு பயன் பெறுமாறு யாழ்ப்பாண இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான செயற்றிட்டத்தின் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட அதிகாரி அறிவித்துள்ளார். (4-12)

# தமிழ் மனிதநேய செயற்பாட்டாளர் தொடர்பான வழக்கு விசாரணைகள்

(கொழும்பு)

நெதர்லாந்தில் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமான 5 தமிழ் மனிதநேயச் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ்வழக்கில் பல திருப்பங்களை ஏற்படுத்துவதாக தமிழர் தரப்பில் வாதிட்ட பிரபல வழக்கறிஞர் விக்ரம் கொப்பே மிக ஆணித்தரமான பல விடயங்கள் முன்வைத்து வாதாடியிருந்தார்.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ் அமர்வில் பெருமளவில் தமிழ் மக்கள் வருகை தந்திருந்தது. குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் விசாரணையின் போது பல முக்கிய விடயங்களை எடுத்துக்காட்டி வாதிட்ட விக்ரம் கொப்பே தனது கட்சிக்காரர்கள் தரப்பில் சில முக்கியமான தீர்மானங்களை முன்வைப்பதற்கு 30 நிமிடங்கள் மேலதிகமாக வேண்டும் என்று முன்வைக்கப்பட வேண்டுகோள் 3 பேர் அடங்கிய நீதிபதிகளால் முற்றாக நிராகரிக்கப்பட்டது.

இந்த முடிவை சற்றும் எதிர்பாராத விக்ரம் கொப்பே தனது கட்சிக்காரர் தரப்பு நியாயங்களை முன்வைக்க 30 நிமிடங்கள் மேலதிகமாக தரமறுத்த முதல் நீதிபதிகள் குழு நீங்கள் தான் என்று கூறி அந்த நீதிபதிகள் குழுவிற்கு எதிராக நெதர்லாந்து சட்ட விதிகளுக்கு அமைவாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்.

இத்தீர்மானத்திற்கு மற்றைய வழக்கறிஞர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

இதன் காரணமாக குறித்த வழக்கு விசாரணை மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டது. (4-2)

# மின்சக்தி தேவையை நிவர்த்தி செய்ய பாரிய வேலைத்திட்டம் அவசியம்

## மின்சக்தி எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகரித்துவரும் மின்சாரத்திற்கான கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு பாரிய வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிக்கிறார்.

கொழும்பிலுள்ள மக்கள் கலாகேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது எஸ்-5 கருத்திட்டத்தின் கீழ் மின்சாரசபையில் விசேட திறமைகளை வெளிப்படுத்திய நிறுவனங்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

உலகிலுள்ள அனைத்து வளங்களையும் உபயோகித்து முடிந்த பின்னர் எதிர்வரும் 2030ஆம் ஆண்டளவில் மின்சாரத்திற்குப் பாரிய தட்டுப்பாடு நிலவவுள்ளதாக அமைச்சர் தெரிவிக்கின்றார்.

உலகில் எதிர்வரும் காலங்களில் மின்சாரத் துறையில் புதிய மின்சக்திகளை கண்டுபிடிப்பதை விட தற்போதுள்ள மின்சக்திகள் துரிதமாக அரிதாகி வருகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (4-2)

# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் குறைந்த அளவிலேயே வெளிவருகின்றன

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் 18 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

24 மணித்தியாலய அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு ஏற்படுத்தி புகார் செய்தவர்களின் எண்ணிக்கையே இந்த புள்ளி விபரத் தரவு சுட்டி நிற்பதாகவும் இதனை விடவும் அதிகளவான துஷ்பிரயோ சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் அதிகளவு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும் குறைந்தளவான சம்பவங்களே வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமூகக் கலாசாரக் கட்டமைப்பு மற்றும் ஏனைய பிற காரணிகளினால் சம்பவங்கள் தொடர்பில் அதிகளவில் முறைப்பாடு செய்யப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது. (4-2)

# அவுஸ்.செல்ல முயன்றவர்கள் தொடர்பில் புலன் விசாரணை

(கொழும்பு)

மீன்பிடி படகொன்றின் மூலம் அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிச் செல்லவிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட 35 பேர் தொடர்பில் புலன் விசாரணை அறிக்கை பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்கள் அடங்குகின்றனரா என கண்டறிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவினர் அறிக்கையைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக பொலிஸாரும் நீதிமன்றிற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனால் விசாரணைகள் முடிவுறும் வரை சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டுமென்ற பொலிஸாரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிவான் அவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-2)

# கணவன் இறந்தது கூட தெரியாது

## மூன்று நாட்கள் பிணத்துடன் வாழ்ந்த மனநிலை பாதித்த பெண்ணின் பரிதாபம்

(காஞ்சிபுரம்)

காஞ்சிபுரத்தில் கணவன் இறந்து 3 நாட்களானது அறியாமல் பிணத்துடன் வசித்த அரசு பெண் அதிகாரியை பொலிஸார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

காஞ்சிபுரம் வீட்டுவசதிவாரிய குடியிருப்பில் வசித்தவர் தியாகராஜன். இராணுவ அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். அவரது மனைவி குணபூஷணம்.

தியாகராஜன் எப்போதும் குடித்துவிட்டு ஊர் சுற்றி வந்தார். இதனால் கடந்த 4 மாதங்களுக்குள் முன் குணபூஷணத்திற்கு மனநிலை பாதிக்கப்பட்டது. இதனால் வேலைக்கு போகாமல் குணபூஷணம் வீட்டிலேயே முடங்கி கிடந்தார்.

குணபூஷணத்தின் நிலையை கண்டு மனமுடைந்த தியாகராஜா கடந்த 3 நாட்களுக்கு முன் சேலையில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

ஆனால் மனநிலை பாதிக்கப்பட்டிருந்த குணபூஷணத்திற்கு இது குறித்து அறியாமல் அவருடன் வசித்து வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் தியாகராஜனின் வீடு திறக்கப்படாமல் உள்ளிருந்து கடும் துர்நாற்றம் வீசுவதாக அருகில் வசிப்போர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் கதவை திறந்து பார்த்த போது தியாகராஜனின் உடல் அழுகிய நிலையில் தூக்கில் தொங்கி கொண்டிருந்தது.

இதை அறியாமல் அந்த உடலுடன் வசித்த குணபூஷணம் அதன் அருகிலேயே மயங்கி கிடந்தார். தியாகராஜனின் உடலை மீட்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மனநிலை பாதிக்கப்பட்ட குணபூஷணத்தை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தனர். (4-2)

# பிறந்தநாள் பரிசு வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுதலையானார்

முதல்வர் ஜெயலலிதாவுக்கு பிறந்த நாள் பரிசாக ரூ 2 கோடி காசோலைகள் வந்தது தொடர்பான வழக்கிலிருந்து அவரை விடுவித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1992 ஆம் ஆண்டு ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்த போது அவரது பிறந்த நாளுக்குப் பரிசாக ரூ2 கோடி அளவிலான காசோலைகள் வந்தன.

இதை அரசுக் கணக்கில் சேர்க்காமல் தனது கணக்கில் அவர் போட்டுக் கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கில் ஜெயலலிதா தவிர செங்கோட்டையன், அழகு திருநாவுக்கரசு ஆகியோரும் சேர்க்கப்பட்டனர்.

இந்த வழக்கை சி.பி.ஐ நடத்திவந்தது. இத்தனை காலமாக இழுத்துக் கொண்டிருந்த இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை பத்து ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டது. இதை எதிர்த்து ஜெயலலிதா சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி கே.என். பாட்ஷா சி.பி.ஐ காலதாமதமாக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது. இதற்கான காரணத்தை அது கூறவில்லை என்று கூறி இந்த வழக்கிலிருந்து ஜெயலலிதா, செங்கோட்டையன், அழகு, திருநாவுக்கரசு ஆகியோரை விடுவித்து உத்தரவிட்டார்.

தற்போது அழகு திருநாவுக்கரசு தி.மு.க.வில் இருப்பது நினைவிருக்கலாம். இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஜெயலலிதா மீதான வழக்குகளில் மேலும் ஒன்று குறைந்துள்ளது.

முதல்வர் ஜெயலலிதா மீது தி.மு.க ஆட்சியில் தொடரப்பட்ட வழக்குகள் பிளசன்ட் ஸ்டே வழக்கு (துண்டனைஅப்பீல் நிலுவையில் உள்ளது.), சொத்துக்குவிப்பு வழக்கு (நிலுவை) கிரானைட்குவாரி ஊழல்(நிலுவை), வருமான வரி கணக்கு தாக்கல் செய்தது (நிலுவை)என பல வழக்குகள் உள்ளன. (4-2)

## பாரதச் செய்திகள்



ஆஸ்திரியா மற்றும் சுவிட்ஸர்லாந்து நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செல்லும் ஜனாதிபதி பிரதீபா பாட்டீலை பூங்கொத்து கொடுத்து வழியனுப்பி வைக்கும் பிரதமர் மன்மோகன் சிங்குடன் லோக்சபா சபாநாயகர் மீராகுமார் நிற்பதையும் படத்தில் காணலாம்


# தி.மு.க.வை யாராலும் வீழ்த்திவிட முடியாது

(சென்னை)

அடுத்தடுத்து தி.மு.க ஆட்சி தான் வரும் என்று இலட்சக்கணக்கானோர் சொல்லி அதை நம்பிக் கெட்டவன் நான் என்று தி.மு.க தலை வர் கருணாநிதி கூறினார்.

அண்ணாதுரை ஈ.வெ.ராமசாமி மற்றும் தி.மு.க பிறந்த நாள் விழா ஆகியவை முப்பெரும் விழாவாக நேற்று முன்தினம் நடந்தன. இதில் தலைவர் கருணாநிதி பங்கேற்றுப் பேசியதாவது, அடுத்து தி.மு.க ஆட்சி தான் வரும் என்று இலட்சக்கணக்கானோர் சொல்லி அதை நம்பிக் கெட்டவன் நான். கடந்த தேர்தலில் தி.மு.க சரித்திர பிரசித்தி பெற்ற தோல்வியை அடைந்து ஜனநாயக விளையாட்டால் இந்த விபரீதம் நடந்துள்ளது. இங்கு மட்டுமல்ல இலங்கையிலும் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

குறைந்த எண்ணிக்கை அரசாக இருந்த நாங்கள் ஐந்து ஆண்டுகளும் கூட்டணிக் கட்சிகளை அரவணைத்துச் சென்றோம். ஆனால் அ.தி.மு.க அதிகபடியாக இருந்து மூன்று மாதத்தில் கூட்டணிக் கட்சிகளை விரட்டி விட்டது. தி.மு.க ஆட்சியை ஒரு அமைச்சர் கயவர் ஆட்சி என்கிறார். அமைச்சர் உதயகுமார் பேசும் போது, கருணாநிதியின் உயிர் தூக்கில் போகுமோ? தூக்கத்தில் போகுமோ என்கிறார். எப்படிப் போனாலும் தமிழ்த் தாய் மடியில் தான் போகும். அதற்காக கவலைப்படவில்லை. ஆனால் தூக்கத்திலும் துக்கத்திலும் போகும் உயிர் இதுவல்ல. தமிழன் எப்போதும் இன உணர்ச்சியுடன் வாழ்கிறான் என்ற செய்தி கிடைக்கிறதோ அப்போதுதான் என் உயிர் போகும். தி.மு.க வை யாரும் வீழ்த்த முடியாது. இது பட்டமரமல்ல மலர்களைக் கொண்ட மரம் உயிரைப் பணயம் வைத்தாவது இனப் போராட்டத்தில் தி.மு.க வெல்லும் என கருணாநிதி பேசினார். (4-2)



# கனிமொழி உள்ளிட்ட ஏழு பேருக்கு பிணை வழங்க சி.பி.ஐ கடும் எதிர்ப்பு

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள கனிமொழி உள்ளிட்ட ஏழு பேருக்கு பிணைவழங்க சி.பி.ஐ. எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் கைதான 7 பேரும் இரண்டாவது முறையாக பிணை கேட்டு மனு தாக்கல் செய்துள்ளனர். இவர்களுக்கு பிணை அளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சி.பி.ஐ சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது, இந்த வழக்கில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டதற்கு பின் தான் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணை கோர முடியும். எனவே அவர்களுக்கு பிணை அளிக்கக்கூடாது.

கலைஞர் தொலைக்காட்சியில் கனிமொழிக்கு 20 சதவீத பங்கு உள்ளது. கலைஞர் தொலைக்காட்சியின் செயற்பாடுகளில் அவருக்கு முக்கிய பங்கு உண்டு.

கலைஞர் தொலைக்காட்சியின் அன்றாட நடவடிக்கைகளை சரத்குமார் தான் கவனித்து வந்தார். இந்த தொலைக்காட்சி அலைவரிசைக்கு வந்த 200 கோடி ரூபாய் பரிமாற்றம் நேர்மையான வர்த்தகம் தொடர்பான பரிமாற்றம் அல்ல சட்ட விரோதமாக வந்தது.



அத்துடன் கனிமொழி மனு மீதான விசாரணை வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதிபதி ஓ.பி.சைனி உத்தரவிட்டுள்ளார். அவரது பிணை மனு உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வருவதாக இருந்தது. ஆனால் அரசு மற்றும் கனிமொழி தரப்பு சட்டத்தரணிகள் இன்றைய விசாரணையை ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொண்டதையடுத்து எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு விசாரணையை நீதிபதி ஒத்திவைத்தாார்.

இவ்வழக்கில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படாதவரை பிணை வழங்க இயலாது என்பதால் இருதரப்பினரும் வேறு திகதிக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டதாக தெரிகிறது. மேலும் எதிர்வரும் 15 ஆம் திகதி சி.பி.ஐ குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார். (4-2)



தமிழக முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் பரிசு கொடுத்த வழக்கிலிருந்து உயர் நீதிமன்றம் விடுவித்ததையடுத்து அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் தொண்டர்கள் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கிக் கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# ஏமனில் அல்கொய்தா இயக்கத்தின் தளபதி அன்வர் அல்அவ்லகி அமெ.தாக்குதலில் பலி

## அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்படலாம் என எச்சரிக்கை



(சனா)

ஏமனில் அல்கொய்தா முக்கிய தலைவர் அமெரிக்கா ஏவுகணை தாக்குதலில் பலியானார். பாகிஸ்தான் அபோதாபாத்தில் கடந்த மே மாதம் 2 ஆம் திகதி அல்கொய்தா தலைவர் பின்லேடன் அமெரிக்க படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து அல்கொய்தாவின் முக்கிய தலைவர்களை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானை தொடர்ந்து ஏமனில் அல்கொய்தா தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகம் உள்ளன. எனவே அந்நாட்டு இராணுவத்துடன் இணைந்து அமெரிக்கா அவர்களை வேட்டையாடி வருகின்றது. பாகிஸ்தானை போன்று ஏமனிலும் ஆளில்லா விமானங்கள் மூலம் தீவிரவாதிகள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தலைநகர் சனா அருகேயுள்ள காசெப் நகர் பகுதியில் அல்கொய்தா தீவிரவாதிகள் ஒரு வாகனத்தில் சென்று கொண்டிருப்பதாக அமெரிக்க உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து அங்கு ஆளில்லா விமானங்கள் மூலம் ஏவுகணை வீசப்பட்டது. அதில் அல்கொய்தா இயக்கத்தின் முக்கிய தலைவர் அன்வர் அல் அவ்லாகி கொல்லப்பட்டார். இந்த தகவலை ஏமன் இராணுவ அமைச்சகம் அறிவித்துள்ளது.

இவர் அல்கொய்தாவின் தீவிரவாதிகளின் மதகுரு ஆவார். கடந்த 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவின் டெக்சாஸ்சில் உள்ள இராணுவ தளத்தில் நடந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் இவருக்கு தொடர்பு உண்டு. மேலும் கிறிஸ்மஸ் பண்டிகையின் போது டெட்ராஸ்ட்டில் அமெரிக்க விமானத்தை குண்டு வைத்து தகர்க்க நடந்த சதியில் இவருக்கும் பங்கு உண்டு.

மேலும் ஏமனுக்கு வருகை தரும் வெளிநாட்டினரை கொலை செய்ய அல்கொய்தா அமைப்புடன் ஒப்பந்தம் செய்து இருந்துள்ளார். இவை தவிர ஏமனில் நடைபெறும் வன்முறை சம்பவங்களிலும் இவரது பங்கு உள்ளது.

எனவே இவர் அமெரிக்கா மற்றும் ஏமன் நாடுகளிலும் தேடப்பட்டு வந்த குற்றவாளி ஆவார். இவர் கொல்லப்பட்டதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. அவலாகி கொல்லப்பட்டதன் மூலம் தீவிரவாதிகளுக்கு மட்டும் பின்னடைவு அல்ல. அல்கொய்தா தீவிர வாத இயக்கத்தை வெற்றி கண்டு அழிப்பதற்கும் இது ஒரு மைல்கல் ஆக அமைந்துள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கருத்து தெரிவித்துள்ளார். அல்கொய்தா இயக்கத்தின் முக்கிய தளபதி அன்வர் அல் அவ்லகி அமெரிக்காவின் ரொக்கெட் தாக்குதலில் பலியானதைத் தொடர்ந்து அல்கொய்தாவின் பழிவாங்கல் தாக்குதல் நடவடிக்கைகள் அமெரிக்காவில் நிகழலாம் என உளவு அமைப்பு எச்சரிக்கை விடுத்தது. இதைத் தொடர்ந்து நியூயோர்க்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நியூயோர்க் பொலிஸ் ஆணையர் ரேமண்ட் கெல்லி இது குறித்து கூறுகையில்,

அவ்லகிக்கு ஏராளமான அனுதாபிக்கள் அமெரிக்காவில் குறிப்பாக நியூயோர்கில் இருக்கிறார்கள். இந்தக் காரணத்தால் அவருடைய கொலையை தொடர்ந்து அவருடைய ஆதரவாளர்களால் பழிவாங்கல் நடவடிக்கைகள் இங்கே மேற்கொள்ளப்படலாம் என்றார். (4-2)

## குருவிகளை கடத்த முயன்ற சிறுவன்

### பிரான்சில் சம்பவம்

தவறு செய்ய வேண்டும் என்று நினைத்து விட்டால் மனிதர்களின் மனம் எப்படியெல்லாம் சிந்திக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக தான் இந்த சம்பவம் நடந்தேறி இருக்கின்றது.

விமான நிலையத்திலிருந்த ஒரு சிறுவனை சோதித்த பொழுது அவனுடைய உள்ளாடையில் ஒழித்து வைத்த நிலையில் சுமார் பதினைந்து குருவிகளை சுங்கத் துறை அதிகாரிகள் மீட்டு இருக்கின்றார்கள்.

பிரான்சில் கைன்னில் ரோஷம்பு விமான நிலையத்தில் தான் இந்த சிறுவன் சிக்கி இருக்கின்றான். இவன் தன்னுடைய உள்ளாடைக்குள் சுமார் பதினைந்து குருவிகள் வரை ஒழித்து வைத்துள்ளான்.

இவன் அந்த குருவிகளை ஒரு துணியில் சுற்றி இதற்கென்று உருவாக்கிய பிரத்தியேக பையில் வைத்து நூதன முறையில் கடத்த முயற்சித்த பொழுது வசமாக சுங்கத் துறை அதிகாரிகளிடம் பிடிபட்டான். (4-2)

## மிகச்சிறிய கமராவில் புகைப்படங்களை எடுத்து சாதனை புரிந்து வரும் நபர்

(லண்டன்)

இங்கிலாந்தின் பிரிஸ்டல் நகருக்கு அருகே உள்ள போர்ட்டிஷெட் பகுதியை சேர்ந்த நிருபர் ருஸ்டின் கின்னஸ்(வயது-49) கலை அம்சம் கொண்ட புகைப்படங்கள் எடுப்பதில் வல்லவர். மிகச் சிறிய கமெராவில் இருந்து வித்தியாசமான கோணங்களில் படம் எடுப்பது இவருக்கு பொழுதுபோக்கு. சமீபத்தில் இவர் செய்திருக்கும் சாதனை வாய்க்குள் கமெராவை வைத்து படமெடுத்திருப்பது.

3அங்குல நீள மினி கமராவை புகையிலை மெல்வது போல கடைவாய் பல்லில் பொருத்தினார். தன் மகன், மனைவி, டாக்டர், பேஸ்ட்டுடன் வாய்க்குள் வரும் பிரஷ் தட்டில் இருந்து வாய்க்குள் வீசப்படும் உணவுஷவரில் இருந்து முகத்தில் கொட்டும் தண்ணீர், வீதி அருங்காட்சியக பொம்மை, இயற்கை காட்சிகள் என சகலமானதையும் வாய் கமெராவில் இருந்த படம் பிடித்தார். மேலும் கீழும் பிரமாண்ட சைஸில் பற்களின் உட்பக்கம் தெரிய அதன் நடுவே வெளிக்காட்சிகள் தெரிவது வித்தியாசமாக இருக்கின்றது.

இதுபற்றி ஜஸ்டின் கூறியதாவது,


மினி கமெராவின் சாதனை பல படங்களை எடுத்தது மட்டுமல்ல. இன்னொரு பெரிய சாதனையையும் அது படைத்திருக்கிறது.

வாய்க்குள் கமெரா வைத்த பிறகு தான் வாயின் உட்புற அமைப்பை தெரிந்து கொண்டேன். அதன் அழகையும் மென்மையையும் உணர்ந்தேன். அழகிய வாய்க்குள் புகையை செலுத்தி கெடுக்க வேண்டுமா என்ற எண்ணம் வந்தது . சிகரெட் பழக்கத்தையே விட்டு விட்டேன் என்றார். (4-2)




## பாக். உடன் உறவை வலுப்படுத்தவே அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளது

### ஹிலாரி கிளிண்டன் தெரிவிப்பு



பாகிஸ்தானுடனான உறவை வலுப்படுத்தவே விரும்புவதாக அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

ஹக்கானி பயங்கரவாத அமைப்புடனான உறவை பாகிஸ்தான் உடனடியாக துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க முப்படைகளின் கூட்டுத் தளபதி மைக் முல்லன் சில நாட்களுக்கு முன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஹக்கானி, லஷ்கர் இ தொய்பா போன்ற பயங்கரவாத இயக்கங்கள் மூலமாக பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. நாச வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியிருந்தார். இது பாகிஸ்தான் தலைவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அமெரிக்காவுடனான உறவு குறித்து பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், பாகிஸ்தானுடன் வலுவான உறவை கொள்ளவே விரும்புவதாக கூறினார்.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவு வலுவான அடித்தளத்தில் அமைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேநேரம் பயங்கரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் சொர்க்க பூமியாக இருக்கக்கூடாது.

பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா போரிட்டு வருகின்றது. பாகிஸ்தான் அதன் செயற்பாட்டில் மாற்றங்களை கொண்டு வரவேண்டும். பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆதரவு, புகலிடம் அளிப்பதை நிறுத்திக் கொண்டு அமெரிக்காவுடன் இணைந்து பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். பாகிஸ்தானுடனான உறவு மேம்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா தீவிரமாக உள்ளது என்றார். (4-2)

## கடற்தீவுகளுக்கு உரிமை கோரும் பிலிப்பைன்ஸ்

### சீனா கடும் கண்டனம்

(பீஜிங்)

தென் சீனக்கடல் பகுதியில் உள்ள தீவுகள் சீனாவுக்கு சொந்தமானவை. இதை சர்வதேச பிரச்சினையாக்க முயற்சித்தால் எந்தவித பலனும் விளையாது என்று சீனா எச்சரித்துள்ளது. தென் சீனகடல் பகுதியில் சில தீவுகள் உள்ளன. அவை சீனாவுக்கு சொந்தமானவை. அதற்கு யாரும் உரிமை கோர முடியாது என்று சீனா பல ஆண்டுகளாக கூறி வருகின்றது.

ஆனால் வியட்நாம், ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் தீவுகள் தங்களுக்குத் தான் சொந்தம் என்று போராடி வருகின்றன. இந்நிலையில் சீன இராணுவ அமைச்சு செய்தித் தொடர்பாளர் ஜெங் யான் ஷெங் கூறியதாவது,

தென் கடல் பகுதியில் உள்ள தீவுகள் சீனாவுக்குச் சொந்தம் என்று தெளிவாக கூறி வருகின்றோம்.

அந்த தீவுகளுக்கு உரிமை கோரி அவற்றை பல நாட்டு பிரச்சினையாகவோ அல்லது சர்வதேச பிரச்சினையாகவோ மாற்ற ஆசிய நாடுகள் முயற்சித்தால் ஒரு பலனும் கிடைக்காது.

சீன இறையாண்மையை பாதிக்கும் வகையில் செயற்படுவதை அனுமதிக்கமாட்டோம். தீவுகளுக்கு பிலிப்பைன்ஸ் உரிமை கோருவதை ஏற்க முடியாது.

இந்த பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணவே சீனா விரும்புகின்றது. தெற்காசிய பகுதியில் அமைதி ஸ்திரத்தன்மை பாதிக்கப்படாத வகையில் ஆசிய நாடுகள் செயற்பட வேண்டும் இவ்வாறு அவர் தெரிவித்தார். (2)

## இந்திய மற்றும் எகிப்து நாடுகளுக்கு விசாவில் சில கட்டுப்பாடுகள் விதிப்பு

### குவைத் அரசு திட்டம்

இந்தியா மற்றும் எகிப்தை சேர்ந்தவர்களுக்கான விசாவில் சில கட்டுப்பாடுகளை விதிக்க குவைத் அரசு திட்டமிட்டுள்ளது. இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் குவைத்தில் பல்வேறு வேலைகளில் பணிபுரிகின்றனர். அதிலும் இந்தியர்கள் மற்றும் எகிப்தியர்கள் அதிக அளவில் வேலை செய்கின்றனர்.

அங்குள்ள மொத்த வெளிநாட்டினரில் இந்த 2 நாடுகளை சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 69 சதவீதம். இவர்களுக்கு அதிக எண்ணிக்கையில் விசா வழங்கியதால் விசாவில் கட்டுப்பாடுகளை விதிக்க அந்நாட்டு குடியுரிமை இயக்குநரகம் முடிவு செய்துள்ளது.

குவைத் அரசின் இந்த திடீர் முடிவால் விசா கட்டுப்பாட்டில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்நோக்கும் நிலை இந்தியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரு சில நாட்களில் இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என்று அந்நாட்டு குடியுரிமை இயக்குநரக வட்டாரம் தெரிவித்துள்ளது.

மேலும் அண்மைக் காலமாக நிலையற்ற அரசியல் தன்மை நிலவுவதால் ஈராக், ஈரான், சிரியா, உட்பாக பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் குவைத்தில் குடியேறுகின்றனர்.

இதையடுத்து நாட்டின் பாதுகாப்பை நிலைநாட்டும் வகையில் இந்நாடுகளுக்கான விசாவை குவைத் அரசு தடை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (4-2)

# பொதுநலவாய அமைப்பு நாடுகளில் இருந்து இலங்கையை நீக்குவதற்கு ஆதரவு வேண்டும்

## கனேடிய லிபரல் கட்சி எம்.பி.கோரிக்கை

தனது சொந்த குடிமக்களை படுகொலை செய்த இலங்கை அரசாங்கத்தின் அங்கத்துவத்தை பொதுநலவாய நாடுகளின் அமைப்பிலிருந்து நீக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கனேடிய அரசாங்கம் தனது முழுமையான ஆதரவை வெளிப்படையாக வழங்க வேண்டும் என கனேடிய லிபரல் கட்சி பாராளுமன்ற உறுப்பினராக ஜிம் கரிஜீயானிஸ் தெரிவித்தார்.

ஒட்டாவில் உள்ள கனேடிய பாராளுமன்ற வளாகத்தில் புதன்கிழமை கனேடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பின் ஏற்பாட்டில் திரையிடப்பட்ட இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர் பான சனல்-4 விபரணப் படத்தின் காட்சிகளை பார்த்துவிட்டு கனடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைக்கு கருத்து வெளியிட்ட போதே ஜிம்கரிஜினானிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், கொடிதான யுத்தத்தின் போது தான் தனது சொந்த மக்களை கொலை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு தகுந்த நீதி வழங்கப்படும் வரை இலங்கை அரசின் சர்வதேச செயற்பாடுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்றார்.

இதேவேளை இறுதிக் கட்ட போரின் போது இடம் பெற்றதாக சுமத்தப்படும் மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன்பயார்ட் மீண்டும் கோரியுள்ளார். (4-2)

# நெடுந்தீவு பிரதேச சபையின் சம்பிரதாயபூர்வ ஆரம்பவிழா

நெடுந்தீவு பிரதேச சபை சம்பிரதாய பூர்வமாக சபை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் விழா நாளை மறுதினம் காலை 10 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபைக்கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயச்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி, சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்தீரி அலன்ரின், பாராளுமன்றக் குழுக்க ளின் உப-தலைவர் முருகேசு சந்திரகுமார், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாநகரமுதல்வர் திருமதி யோ.பற்குணராசா, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி.ர.விஜயலட்சுமி, வடமாகாண உள் ளூராட்சி ஆணையாளர் சி.அச்சுதன், யாழ்ப் பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் ம. ஜெ.கூ ,நெடுந்தீவு உதவி அரசாங்க அதிப்ர் ஆ.சிறீ, நெடுந்தீவு பலநோக்கு கூட் டுறவுச்சங்க தலைவர் ஏ.டபிள்யூ அரியநாய கம், நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஈ.என். ஏக்கநாயக்க , நெடுந்தீவு கடற் படை முகாம் கட்டளை அதிகாரி கப்டன் சீ.றூளரணசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-2)

# பனை அபிவிருத்திச்சபை இவ்வாண்டு 20 மில்லியனை இலாபமாக பெற்றது

(கொழும்பு)

இலங்கை பனை அபிவிருத்தி சபை 2010 ஆம் ஆண்டில் 20 மில்லியன் ரூபா இலாபமாக பெற்றுள்ளது. கடந்த வருடத்தை விட இது 12 மில்லியன் ரூபா அதிகமாகும்.

பனை சார்ந்த சமூகத்தின் சமூக அந்தஸ்தை உயர்த்துவதிலும் பனை வளத்தை புதுப்பிப்பதிலும் பனை அபிவிருத்திச்சபை கவனம் செலுத்துவதாக சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

பனை உற்பத்தி பொருட்கள் பிரபல்யப் படுத்துவதற்கான விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகள், இப்பொருட்கள் சுரண்டப்படுவதை தடுக்கும் நடவடிக்கைகள், பனை சார்ந்த கைவினைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இத்துறையில் ஈடுபடும் பெண்கள் குழுக்களை அமைத்தல் என்பனவற்றிலும் இச்சபை கவனம் செலுத்துவதாகவும் அவர் கூறினார்.

2008 ஆம் ஆண்டு இச்சபை நட்டத்தில் இயங்கியபோதிலும் கடந்தவருடம் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களை தரமுயர்த்துவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதுவே திடீர் வருமான அதிகரிப்புக்கு காரணம் எனவும் லோகநாதன் தெரிவித்தார்.

நாட்டின் தென்பகுதியில் பனை உற்பத்திப் பொருட்களின் விற்பனைநிலையங்களை அமைக்கவும் இப்பொருட்களை ஏற்றுமதி செய்யவும் பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (4-2)

## பழைய பத்திரிகை ஏல விற்பனை

(கல்வயல்)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திலுள்ள பொது நூலகத்தின் பழைய பத்திரிகைகளின் ஏல விற்பனை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் நடைபெறும்.

ஏலத்தில் சித்தி பெறுவோர் ஏலத் தொகையை உடன் செலுத்துவதோடு பத்திரிகைகளை உடனடியாக அங்கிருந்து எடுத்துச் செல்ல வேண்டுமெனவும் சாவகச்சேரி நகராட்சி மன்றத் தலைவர் அறிவித்துள்ளார்.

(4-2-12-31)

# கொழும்பில் நடைபெறும் முதியோர் தின விழாவில் வடக்கிலிருந்து 15 பேர் பங்கேற்பு

(கொழும்பு)

சர்வதேச முதியோர் தினம் நேற்று ஆரம்பமானது. இதனை முன்னிட்டு நேற்று நடைபெற்ற சர்வதேச முதியோர் தின வைபவத்தில் யாழ். மாவட்டத்திலிருந்தும் 15 முதியோர் அழைத்துசெல்லப்பட்டுள்ளனர்.

பத்தரமுல்ல ஜனகால கேந்திரயவவில் நடைபெறவுள்ள இவ்விழாவில் ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவிலிருந்தும் ஒவ்வொரு முதியோர் கலந்து கொள்கின்றனர்.

இவர்களுக்கான போக்குவரத்து செலவாக இரண்டாயிரம் ரூபா வீதம் ஒவ்வொரு முதியோருக்கும் வழங்க முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் திருமதி ஜே.கிருஷ்ணமூர்த்தி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவும் கௌரவ விருந்தினராக சமூக வேவைகள் பிரதி அமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய முதியோர் விழாவை முதியோர்களுக்கான தேசிய செயலகத்துடன் ஹெல்ப் ஏஜ் சிறீலங்காவும் இணைந்து நடத்து கின்றது.

இம் முறை நாட்டின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் முதியோர் சங்கப் பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்ள வழி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இளைப்பாறிய கிராம அலுவலர்
உயர்திரு. இராசா கணேசலிங்கம்
அவர்களின்
சேவைநலன் பாராட்டு விழா
அழைப்பிதழ்



காலம்:- 02.10.2011 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- பிற்பகல் 2.30 மனி
இடம்:- சிவசக்தி மணிமண்டபம், ஆவரங்கால்
தலைமை
திரு.மூ.ஆனந்தகிருஸ்ணன் அவர்கள்
(சமாதானநீதிவான், இளைப்பாறிய பொதுமுகாமையாளர் வலிகிழக்கு வ.ப.பல.நோ.கூ.சங்கம், அச்சுவேலி)
பிரதமவிருந்தினர்
திரு.ம.பிரதீபன் அவர்கள்
(பிரதேச செயலர், வலிகாமம் கிழக்கு கோப்பாய்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஆவரங்கால் மேற்கு கிராம மக்கள்
(6463)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம்
நினைவுப் பேருரை

நந்தியின் புனைகதைகளில் ஈழப்பின் - காலனிய சமூகம்
(Sri Lankan Post-Colonial Society depicted in Nanthi's fiction)

பேருரை வழங்குநர் :கலாநிதி வி. அரசு
பேராசிரியர் /தலைவர்
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

இடம் :- கைலாசபதி கலையரங்கம்
திகதி :- 03.10.2011
நேரம் :- பிற்பகல் 3.00மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர். (சி-4610)

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவும் இல்லை.
– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இளைஞர்களுக்கு ஓர் அன்புமடல்

ஈழத் தமிழினத்தின் சமகாலம், எதிர்காலம் பற்றிய கவலையின் தாக்கம் குறைந்தபாடாகத் தெரியவில்லை.

தமிழர்கள் என்றால் அவர்கள் சிறந்த நிர்வாகிகள், கல்வியாளர்கள், கடமையுணர்வு மிக்கவர்கள், சமூக; பொருளாதாரத் தளங்களில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் எனப் பல்பரிமாணங்களில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்.

அரசியல்புலத்தில் கூட எங்கள் முன்னைய அரசியல் தலைவர்களின் உறுதித் தன்மை, தியாகம், தமிழ்ப்பற்று இவற்றையெல்லாம் நினைக்கும்போது, நாம் தமிழர் என்று இறுமாப்புக் கொள்ளுமளவிற்கு எங்கள் பெரும்புகழ் பரவியிருந்துள்ளது.

நடந்து முடிந்த விடுதலைப் போராட்டத்தின் கூட்டமைப்புக்கூட இறுக்கமானதாகவும் மற்றவர்கள் அதனை மதிப்போடு ஏற்றுக் கொள்வதாகவும் இருந்ததை எளிதில் மறந்துவிடவும் முடியாது.

விடுதலைசார் அமைப்புகளின் இறுக்கமான கட்டுப்பாட்டின் சொந்தக்காரர்கள் தமிழ் இளைஞர்கள் என்ற தகவல் வேறு.

நிலைமை இதுவாக இருக்கையில், மிக நீண்ட கட்டுக்கோப்பான கலாசாரம் முதல் அறிவுப் பிரவாகமுடைய அரசியல் தலைமைகள் வரை எல்லாமும் உக்கி உடைந்துபோய், இன்று தமிழினம் நாதியற்ற இனமாக மாறியிருப்பதை நினைக்கும்போது எங்கோ மகா தவறு நடந்துள்ளமை தெளிவாகின்றது.

இத்தகைய மிக மோசமான நிலைமையை வேரறுக்க எங்கள் இளைஞர்கள் முன்வர வேண்டும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக எங்கள் இளைஞர்கள் வேறு திசை நோக்கிப் பயணிப்பதைப் பார்க்கும்போது நெஞ்சம் பதைபதைக்கின்றது.

அன்பிற்குரிய இளைஞர்களே! நீங்கள் நினைத்தால் எங்கள் தமிழினத்தின் வாழ்வை தர்மத்தின் வழியில் புதுப்பிக்க முடியும். எங்கள் அரசியலில் ஜனநாயக வழியில் புதுமை படைக்க முடியும்.

ஏமாற்றுக் கூட்டமொன்றின் அரசியல் தலைமையில் இருந்து தமிழினத்தைக் காப்பாற்ற முடியும். இதை நீங்கள் செய்ய வேண்டும்.

# அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை

மக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்கும் அதேவேளை அரச செலவினத்தின் சுமை அதிகரிக்காத வகையில் அரச நிறுவனங்கள் இயங்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களின் அதிகாரிகள் தங்கள் பதவி மற்றும் பொறுப்புகளை நன்குணர்ந்து செயற்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்னோடியாக நிதியமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

பல்வேறு காப்புறுதி முறைகளில் நிலவுகின்ற பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதுடன் வலுவான கட்டமைப்புக் கொண்ட காப்புறுதி முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். (ந-8)

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்தோர்

(கரவெட்டி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்ட எழுத்து மூலமான உடற்தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்த மத்தியஸ்தர்களின் பெயர் விபரம் வருமாறு,

மத்தியஸ்தர் தரம் – III

யாழ்ப்பாணம்

கே.துசிகரன், எம்.ஜி.இதயகுமார், எஸ்.சுரேஸ், எஸ்.சுகிர்தன், எஸ்.துசியந்தன், எம்.கஜதீபன், வீ.கிருபாகரன், ஆர்.பத்மகுமார், எஸ்.எல்.ரஞ்சித், கே.மயூரன், எம்.சுகந்தன், ஏ.சுலக்ஷன்.

பருத்தித்துறை

ஈ.எஸ்.துவாரகன், என்.கஜேந்திரன், ரி.புவிகரன், ரி.இந்துக்கான், எஸ்.சுரேஸ், எஸ்.சிவசுகிர்தன், ஆர்.ராகவன், ரி.லக்ஸ்மன், எம்.நகுலேஸ்வரன், ஜெ.தர்சன், எஸ்.நிஷாந்தன், எஸ்.சிவசெல்வம், என்.ஆனந்தராசா, வி.மனோராஜ், வி.கபில்ரன், ஏ.றூபவர்ணன், எஸ்.ஜெகபிரதாபன், ஏ.மகியூஸ்.

வவுனியா

வி.அஜந், எஸ்.சிவதீபன்.

மன்னார்

கே.நிஷாந்தன், கே.சியாந்தன்.

கிளிநொச்சி

ஆர்.பவுல்ராஜ்.

----

வி.தமிழ்ச்செல்வம், ஏ.மதிமைஸ், எஸ். எம்.வஸ்தீபன், ஜி.கிளாறன்ஸ்.

தரம் – III (பெண்கள்)

யாழ்ப்பாணம்

எஸ்.குமுதினி, எஸ்.கிருஷாந்தினி.

தரம் – II

எஸ்.சுரேந்தர் (யாழ்.)
பி.முகுந்தன் (பருத்தித்துறை). (ந-12,24)

# ரயில் சாரதிகளின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்கின்றன

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதங்களை செலுத்துவதைப் புறக்கணித்துள்ள புகையிரத சாரதிகளின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் 8 நாட்களாக ரயில் சாரதிகள் இந்தச் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து புகையிரத போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ஆர்.ரத்நாயக்கவிடம் வினவியபோது, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட ரயில்களின் போக்குவரத்தில் இருந்து விலகியபோதிலும் மாவட்ட பொறியியலாளர்களை ஈடுபடுத்தி உரிய சேவைகளை முன்னெடுப்பதாக குறிப்பிட்டார்.

எனினும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள புகையிரத சாரதிகள் பிரச்சினைகளுக்கு இதுவரை நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுக்க முடியாமல் இருப்பதாக தெரிவித்தார். (4-2)

# பங்கெடுப்போம், பராமரிப்போம் திருச்சபை தோட்டத்தில் நாமும் கனிதருவோம் (மத் 21:33-43)

எது என்றாலும் அது பண்புநிறைந்ததாக, பயன் நிறைந்ததாக இருக்க வேண்டும். இதை வலியுறுத்தும் இன்றைய முதல் வாசகமும் நற்செய்தியும் அமைகின்றன. திராட்சைத் தோட்டத்தின் பயன் கொடிய குத்தகைக்காரர்களின் பண்பு பற்றி பேசுகின்றன. திராட்சை தோட்டத்தை உருவகமாக வைத்து அமைகின்ற முதல் வாசகத்தில் எசாயாவின் திராட்சை தோட்டத்து பாடல். இறைவன் சம்பந்தமில்லாமல் பிரிந்து ஓடிய மக்களைப் பார்த்துக் கூறும் ஒன்றாக அமைகிறது.

## பரமபிதா காட்டிய பாதை


வாக்களிக்கப்பட்ட நாடு, இஸ்ராயேல் பகுதி மற்றும் யூதேயாப் பகுதி எனப்பிரிகிறது. மக்களும் பிரிகிறார்கள். அரசுகளும் பிரிகிறது. இருவரும் எதிரிகளாக மாறி போரிடுகிறார்கள். மக்களும் இறைவனை விட்டுவிட்டு பல பொய்க்கடவுள்களை வணங்குகிறார்கள். இறைவன், நான் உங்களோடு செய்த உடன்படிக்கை எங்கே போனது? வாக்களிப்பட்ட நாடுகள் எங்கே? அடிமைத்தனத்தில் விடுவிக்கப்பட்ட, பாலைவனத்தில் வழி நடத்தப்பட்ட, நெருப்புத் தூணாக, மேகத் தூணா பாதுகாக்கப்பட்ட அனுபவங்கள் எங்கோ போனது? கொடுத்த அழைப்பையும் தந்த உரிமையை நீங்கள் பராமரிக்கவில்லையே என மனவுணர்வுகளை வெளிப்படுத்துகிறார்.

இன்று நற்செய்தியில் கொடிய குத்தகைதாரர் உவமைவழியாக இயேசு தம்மை ஏற்க மறுத்த பரிசேயர்கள், குருக்கள் மற்றும் மூப்பர்கள், யூதர்களின் நிலையை சாடுகிறார்.

இயேசு தான் அனுப்பப்பட்ட நிலக்கிழாரின் மகன் அவர்களின் நன்றியற்ற தன்மை மகனையே கொல்ல வைக்கின்றது. அவரைத் தான் மக்கள் தோட்டத்திற்கு வெளியே தள்ளிக் கொண்டு போட்டார்கள். (மத் 21:39) இது இயேசு எருலேம் நகருக்கு வெளியே சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டதை குறிக்கிறது. இவ்வாறு கொடிய மனத்தோடு செயற்பட்ட அக்குத்தகைகாரர்களிடமிருந்து இறையாட்சி அகற்றப்பட்டு வேறு மக்களினத்தாரிடம் கொடுக்கப்படும். அது பிற இனத்தார் மற்றும் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும் உரியது என்கிறார் இயேசு.

இந்த உவமையை நாம் எம்வாழ்வோடு இன்று ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் யார்?நாம் தான் அந்த கொடிய தொழிலாளர்கள். இறைவன் நமக்கு விடுக்கின்ற பல்வேறு செய்திகளையும் செய்தியாளர்களையும் நாம் புறக்கணிக்கிறோம். குருக்கள்- துறவியர் மற்றும் மறையறை திருப்தி தரவில்லை, துறவியர் சாட்சி வாழ்வு சரியில்லை, பொறுப்பிலிருப்பவர்கள் முன்மாதிரியாக இருந்து நன்றாக நடந்து முடிவு எடுப்பதில்லை என பொதுவான குறைகளைக் கூறி இறைதிருவுளத்துக்கு எதிராக நடக்கிறோம். இறைவார்த்தையைப் புறக்கணிக்கிறோம் நன்றியற்ற முறையில் வாழ்கிறோம். இறைவனைப் புறக்கணிக்கிறோம். அதன் விளைவாக நிறைவாழ்வை இழக்கவிருக்கிறோம்.

திருச்சபை என்ற திராட்சைத் தோட்டத்தில் திருமுழுக்குப் பெற்றிருக்கும் நாம் ஒவ்வொருவரும் திராட்சை-திருச்சபை தோட்டத்தை அன்றாடம் பராமரிக்க அதில் தொடர்ந்து பங்கெடுக்க அழைக்கின்றோம்.எம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளாத போது, திராட்சைத் தோட்டம் காடாக மாற , கசப்பான கனியே கிடைக்க, நாம்தான் காரணம். ஒவ்வொருவருக்கும் திருச் சபைத் தோட்டத்தில் பங்குண்டு, என் பங்கு சமூகம், என் பங்குத் தந்தை துறவியரென உரிமையோடு பெருமைப்பட வேண்டும்.



திரட்சைத் தோட்டத்தில் பண்படுத்தி பராமரிப்பது போல் மனித சமுதாயத்தையும் நாம் கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும். மனிதரிடையே நிலவவேண்டிய உறவுகள் அன்பு, நீதி, ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். அதிகாரம், அடக்குமுறை போன்ற எதேச்சைப் போக்குகளினால் அழிக்கப்படக்கூடாது.

உரிய காலத்தில் கனி வழங்கும் பொறுப்பு நம்மிடம் தரப்பட்டுள்ளதால் அப் பொறுப்பை சரிவர நிறைவேற்றினால் நாம் திராட்சைத் தோட்ட உரிமையாளராகிய கடவுளின் ஆட்சியில் பங்கேற்றும் அருளை கடவுளே நமக்குத் தருவார். நாம் பலருடைய பங்கெடுப்பினால் இத்திருச்சபைத்தோட்டம் கனி தருகின்றது. பங்கெடுப்போம்-பராமரிப்போம். திருச்சபைத் தோட்டத்தில் நாமும் கனி தருவோம்.

ம. பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.



## அழகானதோர் வாழ்க்கை உங்களுக்கும் உள்ளது அது எமக்குப் புரிகிறது....

மற்றைய வாகனங்களுக்குக் கிடைக்கும் புல் ஒப்ஷன் சேவையினைப் போன்றே, மோட்டார் சைக்கிள் செலுத்தும் உங்கள் வாழ்க்கைக்கும் வேறெந்த காப்புறுதிகளிலும் கிடைக்காத அரிய வாய்ப்புகள் ஏராளம். உங்களுடனும் உங்கள் குடும்பத்தினருடனும் வழித்துணையாக வர ஜனசக்தியிலுள்ள நாம் தயாராகவுள்ளோம்.

JANASHAKTHI FULL OPTION

வாழ்க்கைப் பயணத்தின் வழித்துணை

- மோட்டார் சைக்கிள் செலுத்துகையில் அகால மரணம் ஏற்பட்டால் ரூ.100,000/-
- ரூ. 50,000/- வரை வைத்தியசாலைக் கட்டணம்
- தலை கவச பாதுகாப்புக் காப்புறுதி - இலவசம்
- திடீர் விபத்து நேரிட்டால் ரூ. 100,000/- (காப்புறுதியாளருக்கு)

- 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை
- விபத்து நடந்த இடத்திலேயே அங்கீகாரம்
- நாடளாவிய கராஜ் வலையமைப்பு
- மேலும் பல சலுகைகள் ஏராளம்

அழையுங்கள் 0112 303 300


* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ஜனசக்தி இன்சூரன்ஸ் பீ.எல்.சீ. (பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம்)

JANASHAKTHI INSURANCE


# உண்மையைக் கறக்கும் காந்தம்!

காந்தத்தின் மூலம் ஒருவரிடம் இருந்து உண்மையைக் கறக்க முடியும் என்கிறார்கள், விஞ்ஞானிகள். இதன்மூலம், குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட, ஆனால் வாய் திறக்க மறுக்கிற நபர்களிடம் இருந்து உண்மையை வரவழைத்துவிட முடியும் என்று நம்புகிறார்கள்.

இதுதொடர்பான ஆய்வை மேற் கொண்ட எஸ்தோனிய ஆய் வாளர்கள், காந்தத்தால் மூளை யின் முன்பகுதியைத் தூண்ட முடியும். ஒருவர் பொய் சொல் வதை தடுக்க முடியும் என்கிறார்கள்.



நெற்றிக்கு நேரே பின்புறம் உள்ள 'டார்சோலேட்ரல் பிரிபிராண்டல் கார்டெக்ஸ்' என்ற மூளைப் பகுதியை காந்தத்தால் தூண்டுவதன் மூலம் ஒருவரை உண்மை சொல்லவோ, பொய் பேசவோ வைக்க முடியும் என்கிறார்கள்.
இப்பகுதியின் இடதுபக்கம் அல்லது வலதுபக்கம் என்று எதைத் தூண்டுகிறோம் என்பதைப் பொறுத்தது அது.

ஆனால் மூளையில் பரீட்டல் லோப் பகுதியில் காந்தத்தால் தூண்டுவது, குறிப்பிட்ட மனிதர் முடிவெடுப்பதில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். நேர்மை, நீதிநெறி குறித்த ஒருவரின் சிந்தனையை சக்திவாய்ந்த காந்தத்தால் மாற்ற முடியும் என்பது வியப்பு அளிப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.





சென்றல் ஃபநான்ஸ் கம்பனி பீஎல்சீ (PQ-67)

நகர அலுவலகம் : 270, வொக்ஸ்சோல் வீதி, கொழும்பு 02. தொலை: 011 – 2315055 / 077 2368748

தலைமை அலுவலகம் : 84 ரஜ வீதி, கண்டி. தொலை: 081 2230122 / 077 2368749

இலங்கை மத்திய வங்கி கண்காணிப்பு மண்டலத்தினால் 1988 இல 78 நிதிசர் கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.
கூட்டிணைக்கப்பட்ட திகதி 1957.12.05

*நிபந்தனைகள் உற்பட்டது

## தேசிய...

மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அனேகமாக அழைப்பு விடுக்கக்கூடுமென அரசாங்கத்தின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய ரீதியாக அதிவிசேடமான பொதுவிடயமொன்றை மையப்படுத்திக் குறித்த ஒரு காலப்பகுதிக்குத் தேசிய அரசாங்கம் என்ற செயற்றிட்டத்தை முன்னெடுப்பது குறித்து கடந்த சில தினங்களாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடனும் சிரேஷ்ட அதிகாரிகள் சிலருடனும் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலைமையின் கீழ் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளின்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது எதிர்க்கட்சியிலுள்ள எந்தவொரு கட்சிக்கோ எதிராக வன்முறைகளைக் கையாள வேண்டாமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத் தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவருக்கோ அல்லது எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்களுக்கோ அபகீர்த்தியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாமென தேர்தல் பிரசாரப் பிரிவிற்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக அந்தத் தீகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ந-5)

## இலங்கை அரசின்...

போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்ற அமெரிக்காவின் அழுத்தத்தை இந்தியா ஊக்குவித்து வருவதாக இந்திய அரசியலில் பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் நிலைப்பாடு மற்றும் ஈழத்தமிழ் மக்களுக்கு நடந்த அநீதி தொடர்பில் தமிழக மக்கள் கொண்டுள்ள கழிவிரக்கம் என்பன இந்திய தேசத்தின் ஒற்றுமைக்குப் பாதகமாக அமையுமென இந்திய மத்திய அரசு கருதுவதாலும் இலங்கை அரசு சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் தனது உறவை வலுப்படுத்தி வருவதாலும், இலங்கையில் நடந்த போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை இந்திய மத்திய அரசு ஆதரிப்பதென முடிவு செய்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (ந-5)

## தேசிய மட்ட தடகள...

நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று நடைபெற்ற போட்டிகளின் முடிபில் பதக்கங்களை வென்ற வடக்கு மாகாண வீர, வீராங்கனைகளின் பெயர் விபரம் வருமாறு,

கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 21 வயதுப் பெண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி எஸ்.தனுஜா 3.10 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை படைத்துத் தங்கப் பதக்கம் வென்றார்.

இப்பிரிவில் நீண்டகாலத்திற்கு முன்னர் படைக்கப்பட்ட 2.90 மீற்றர் உயரம் என்ற சாதனையை எஸ்.தனுஜா 3.10 மீற்றர் உயரம் பாய்ந்ததன் மூலம் முறியடித்துப் புதிய சாதனையைப் படைத்தார்.

இதே பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி இ.காவேரி 2.95 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

அத்துடன் கோலூன்றிப் பாய்தல் 19 வயதுப் பெண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி அ.பவித்ரா 3.00 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

இப்பிரிவில் கடந்த வருடம் மேற்படி பாடசாலை மாணவி எஸ்.தனுஜா படைத்த 2.80 மீற்றர் உயரம் என்ற சாதனையை அ.பவித்ரா 3.00 மீற்றர் உயரம் பாய்ந்து முறியடித்துள்ளார்.

மேலும் கோலூன்றிப் பாய்தல் 17 வயது ஆண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் வி.லவணன் 3.71 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

அத்துடன் இதே பிரிவில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவன் ஏ.அன்ரனி பிரசாத் 3.71 மீற்றர் உயரம் பாய்ந்த போதும் அவரால் விடப்பட்ட தவறுகளின் அடிப்படையில் இரண்டாம் இடம் வழங்கப்பட்டு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

அத்துடன் கோலூன்றிப் பாய்தல் 19 வயது ஆண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் ஹோஹாய் றொஷான் 3.65 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கம் பெற்றார்.

மற்றும் உயரம் பாய்தல் 21 வயதுப் பெண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி எஸ்.தனுஜா 1.49 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றார்.

மேலும் தட்டெறிதல் 19 வயது ஆண்கள் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் பி.பானுப்பிரியன் 41.04 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தினைப் பெற் றார்.

மற்றும் 400 மீற்றர் சட்டவேலி ஓட்டம் 19 வயதுப் பெண்கள் பிரிவில் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலய மாணவி ஏ.அனத் 0.10.50 விநாடிகளில் ஓடிச் சிறந்த வெளிப்பாட்டுக்கான வர்ண விருதினை வென்றார். (ந-5,9)

# கொழும்பு-யாழ்.தனியார் பஸ் சேவை வெள்ளிக்கிழமை முதல் புதிய இடத்தில்

கொழும்பு-யாழ்ப்பாண சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசனுக்கு அருகாமையிலுள்ள காணியொன்றிலிருந்து சேவையை ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதனால் அக்காணியிலுள்ள கடற்படை முகாமை அகற்றுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்.-கொழும்பு சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பஸ் உரிமையாளர்களின் 5 பேர் கொண்ட குழுவினரின் ஏற்பாட்டில் கொழும்பு பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனரத்னவுக்கும் யாழ்- கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களுக்குமான சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி புதிய நடைமுறை பின்பற்றப்படும் என அறிவிக்கப்பட்டது.

அத்துடன் சேவையில் ஈடுபட முன்னர் பஸ்களை தரித்து விடுவதற்கு இரத்மலானையில் இடம் ஒன்று ஒதுக்கீடு செய்து வழங்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு-யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் பஸ்களின் சேவை நேர சூசி தயாரிப்பதற்கான கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு வெள்ளவத்தை கொசி ரெஸ்ரோரண்டில் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## இலங்கையில் நடந்த போர்...

கருத்துரைத்த டக்ளஸ் அலெக்சான்டர்,

இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்திவருவதாகக் கூறப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் சுதந்திரமாகவும் சாட்சி பாதுகாப்புக்காகவும் இடம்பெறவேண்டுமானால் அது சர்வதேச ஆணைக்குழுவின் முன்னால் இடம்பெற வேண்டும்.

இது நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளில் தலையிடுவதாக அமையாது. எனினும் இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு தமது பணிகளைச் சர்வதேச ஆணைக்குழுவின் பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றே நாம் வலியுறுத்துகின்றோம் என்றார்.

அண்மையில் 50 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டமை தொடர்பில் கருத்துரைத்த அவர், குறித்த 50 பேரும் இலங்கையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என்பதற்கான உறுதியைப் பிரித்தானிய அரசாங்கம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.

இலங்கையில் தொடர்ந்தும் ஆட்கள் காணாமற்போகும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இடம்பெயர்ந்தோரை இன்னும் இலங்கை அரசாங்கம் உரியமுறையில் குடியமர்த்தவில்லை.

பிரித்தானியாவில் இயங்கும் சிறந்த ஊடகத்துறை காரணமாக சனல்-4 காணொளி மூலம் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான தகவல்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

இந்நிலையில் பிரித்தானிய அரசாங்கம் இலங்கையில் வன்முறைகள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படவும் சமாதானம் ஏற்படுத்தப்படவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் டக்ளஸ் அலெக்சான்டர் கேட்டுக்கொண்டார். (ந-5)

## விடுவிக்கப்பட்டவர்கள்...

1, 800 பேர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் வைபவ ரீதியாக விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இருப்பினும் விடுதலை செய்யப்பட்ட எவரையுமே பெற்றோருடன் வீடுகளுக்குச் செல்வதற்கு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியிடமிருந்து தமது பிள்ளைகளைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்காக வவுனியாவிலிருந்து இவ்வைபவத்திற்கென கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்த 30 பெற்றோர்கள் இதனால் பெரும் ஏமாற்றத்துடன் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றார்கள்.

கொழும்பில் நடைபெற்ற ஆயிரத்து 800 பேரின் விடுதலை குறித்து ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அறிவித்ததாகவும் விடுதலை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்ட அனைவரும் ஒக்டோபர் 3-ம், 4-ம் திகதிகளில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் வைத்துப் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மூத்த ஆலோசகர் சிவலிங்கம் சதீஸ்குமார் தமிழோசையிடம் தெரிவித்தார். (ந-5)

கடைத் தொகுதி வாடகைக்கு
K.K.S. வீதி கொக்குவில் சந்தியில் இரு கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு.
விஸ்தீரணம்: 10'X30', 20'X20'
தொடர்புகளுக்கு: 0770366241
(6466)

விற்பனைக்கு
வைத்தியரின் தனிப்பாவனையில் இருந்த WP-KH-XXXX இலக்கமுடைய Toyota corella (silver colour)1.6L(141), 2008 model கார் விற்பனைக்குண்டு. இன்று (02-10-2011) காலை 8மணி - மாலை 5 மணி வரை "நியூ யாழ் ஆஸ்பத்திரி", பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தியில் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு:- 0776089117
(6458)

மயில் அழகுக்கலை நிலையம்
போட்டோ & வீடியோ
பட்டமளிப்பு விழாவிற்கான சாறி கட்டுதல், நவீன தலை அலங்காரங்கள், முக அலங்காரம் என்பன செய்யப்படும்.
குறுகிய கால பயிற்சி வகுப்புகள்
அடுத்த புதிய பிரிவுகள் 10.10.2011 அன்று ஆரம்பமாகவுள்ளன. பயிற்சியில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
O Beauty Culture & Hair Dressing
அழகுக்கலை & தலை அலங்காரங்கள்
O Modern Bridal make up
நவீன மணப்பெண் அலங்காரங்கள்
O Advance Beauty Culture



(C-4614)
Mrs. Kayalvily Rameshkumar
T.P.:- 0774749101, 0776914123, 021-4922023
India - Sri Lanka

After A/L? Government Schol.
CIMA-UK
Batch I : Sat 7.30-2PM
Batch II : Sun 2-5 PM
Batch III : Mon - Fri 8.30 AM - 2 PM
Engineering-USA
Software / Network
Batch I : Sat & Sun 10 - 12PM
Batch II : Mon- Fri 8 AM -10 AM
BIT University of Colombo-ucsc
Batch I : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch III : Mon- Thu 4.30-5.30 PM
Multimedia_USA
FIT O/L or A/L தகைமை இன்றி பல்கலைகழக அனுமதிக்கு
After A/L கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் BCS - UK, IELTS, TOEFL, CISCO-CCNA Oracle Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.



MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
www.mcsitcampus.org
Diploma Courses..
Free5 Course fee*
*MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL
* மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
* கடல் உணவுகள், மருந்துப் பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
* வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
மற்றும் ஒரு சேவை
01/10/2011 இல் இருந்து
லண்டன் சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு 1kg - 400
கனடாவிற்கு 1kg - 500/=
(PICKUP SERVICE)
DHL கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. 650/= ரூபாவிலிருந்து.
திருமுருகன் கொம்நெற்
(வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற DHL முகவர்)



Head Office.
259, K.K.s Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirumurugan, Main Road, Kilinochchi.
* No.46, Adijapatham Veethy, Thirunelvely.
TCN Express
2B, Nelsen place, Colombo 06. Hot Line - 021 2227835

உல்லாசம்
உங்கள் கண்முன்னே...

**TILKO JAFFNA CITY HOTEL**



No.70/6, K.K.S
Road, Jaffna.
Tel: 021 2225969

web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

**நியூ லலிதாஸ் ஜூவல்லரி** ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு : 021 222 4134**



# வீடு வளவு விற்பனைக்கு

சித்தன்கேணி மகா கணபதி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 4 பரப்பு காணியும், சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு.

**தொடர்பு: 0779010701** (6467)

# மரண அறிவித்தல்

## வீரகத்தி நாகமுத்து

(ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்)



நாரந்தனையை பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மத்தி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நாகமுத்து கடந்த 29.09.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி முத்துப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கனகம்மாவின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், யாழினி (சமுர்த்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), கமலினி (இத்தாலி), வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகாந்தன் (மக்கள் வங்கி, யாழ். பிராந்தியம்), இளங்கோவன் (இத்தாலி), உதயராஜ் (கிராம சேவையாளர், வேலணை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாகித்தியா, சரணுஜா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சண்முகலிங்கம் மற்றும் அருளானந்தசிவம், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் குமரகுருபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (02.10.2011) மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
T.P.:- 0213211693 (சி-4604)

தகவல்:
குடும்பத்தினர்

# 2011 தேருநர் இடாப்பில் உங்கள் பெயரை உட்படுத்த முடியாமல் போய்விட்டதா?

கவலைப்படாதீர்கள்...
தேருநர் இடாப்பில் உங்கள் பெயரை உட்படுத்திக்கொள்ள உங்களுக்கு இன்னுமொரு வாய்ப்பு உள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது இதுதான்**

1. தேர்தல் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.slelections.gov.lk) தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள படிவத்தை நிரப்பி கிராம அலுவலரின் அத்தாட்சிபடுத்தலுடன் மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலுள்ள உதவிப் பதிவு உத்தியோகத்தருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கலாம் அல்லது நேரில் சென்று ஒப்படைக்கலாம்.

**அன்றேல்,**

2. இந்த இணையத்தளத்திலுள்ள படிவம் கீழ்த் தரப்பட்டுள்ளது. அதன்படி தயாரிக்கப்பட்ட படிவமொன்றை கிராம அலுவலரின் அத்தாட்சிபடுத்தலுடன் மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலுள்ள உதவிப் பதிவு உத்தியோகத்தருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கலாம் அல்லது நேரில் சென்று ஒப்படைக்கலாம்.

மாதிரிப் படிவம்
வீட்டு இல: ..............................
முகவரி: ..............................
தொலைபேசி இல: .............................. (இருப்பின்)

உதவிப் பதிவு உத்தியோகத்தர்,
தேர்தல் அலுவலகம்,
.................... மாவட்டம்

தேருநர் இடாப்புத் திருத்தம் - 2011

எனது வீட்டில் வசிக்கும் கீழ் குறிப்பிடப்படுவோரின் பெயர்களை 2011 தேருநர் இடாப்பில் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

| தேருநர்களாகப் பதிவுசெய்துகொள்ளத் தகுதி பெற்றுள்ள நிரந்தரக் குடியிருப்பாளர்களின் பெயர்கள் | பிறந்த திகதி | தேசிய அடையாள அட்டை இல. | இறுதியாகப் பதிவுசெய்யப்பட்ட முகவரியும் வருடமும் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

வீட்டுத் தலைவரின் பெயர்: ..............................
கையொப்பம்: ..............................
திகதி: ..............................
உதவி பதிவு உத்தியோகத்தர்
கிராம சேவை உத்தியோகத்தரின் சிபார்சு: ..............................
திகதி: ..............................

கிராம அலுவலரின் கையொப்பமும்
பதவிவழி இலச்சினையும்

மு.கு: வெளிநாடு சென்றுள்ள இலங்கைப் பிரஜைகள், தேருநர்களாகத் தம்மைப் பதிவுசெய்துகொள்வதற்காக தகவல்களை வழங்கும்போது வெளிநாட்டில் வசிக்கும் இடத்தின் முகவரியையும் இலங்கை கடவுச்சீட்டு இலக்கத்தையும் அறிவிப்பது அத்தியாவசியமாகும்.

**நினைவில் கொள்ளுங்கள்.**

இப்படிவத்தை கிராம சேவை உத்தியோகத்தரின் அத்தாட்சிபடுத்தலுடன் அக்டோபர் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் மாவட்ட உதவிப் பதிவு உத்தியோகத்தருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**இப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்:**

பஃவ்ரல் - இல. 12/3, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, கிருலப்பனை, கொழும்பு 06. தொலைபேசி இல: 011-2514441/2

ஹியூடெக் - இல. 14, மத்தியூ வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 021-2222571 / 2227314

பஃவ்ரல்
பஃவ்ரலின் மற்றுமொரு சமூக நற்பணி -
மேலதிக தகவல்களுக்கு : 0113182532
மோகன்: 072-5369556 - சுதந்த: 072-4359619.

தேருநர் இடாப்பில் உங்களை பதிவு செய்வதற்கான படிவங்களை இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவன இணையத்திலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-4599) மேலதிக தகவல்களுக்கு :- 021 2223668



இலங்கையில் தலைசிறந்து விளங்கும் முன்னனியான நிறுவனம்

# World Express Services

உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்களை அனுப்ப எங்களை நாடுங்கள்

- குறைந்த செலவிலும், துரிதமாகவும், உங்கள் உறவினர்கள், மற்றும் நண்பர்களுக்கு பரிசுப்பொருட்கள், பொதிகள், கடிதங்கள் போன்றவற்றை அனுப்பி வைக்க இன்றே எங்களை நாடுங்கள்
- 10kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கழிவு [விலை] வழங்கப்படும்.
- உங்கள் பொருட்களை உரியவரிடம் ஒப்படைக்க நாங்கள் தயார். எங்களை தொடர்பு கொள்ள நீங்கள் தயாரா?

தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி,
கொழும்பு -15,
தொ.பே: 0112520694

**கிளை: 227, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2220356**
(இந்திய தூதரகத்திற்கு அருகாமை)

கிளை: 180/5 புகையிரத நிலைய வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா
தொ.பே: 024 490 3200

www.worldexpressservices.com
E.Mail: Worldexpress.ser@gmail.com



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.